# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

தடி-2, அடி-3 ஜூன் 2018 தனிச்சுற்றுக்கு மட்டும் நன்கொடை ரூ.20



## நீட் கொடுமைகளை கொட்டித் தீர்க்கும் +2 மாணவி

## மறைக்கப்படும் வரலாற்றுப் போராட்டம்!

## நம் உரிமைக்குரல் காவிரி




# ஸ்ரீகந்தா விலாஸ்

## நாட்டு மருந்து மற்றும் பூஜை பொருட்கள் (வைத்தியர் கடை)

எண்–44 A, தியாகு முதலியார் தெரு, பாண்டிச்சேரி 605 001.
தொலைபேசி: 0413–4204999,
அலைபேசி: 77080 66602, 96002 34222 வாட்ஸ்அப்: 96777 31199
E–mail: srikandhavilasnaatumarnthu@gmail.com

- சர்க்கரை நோய்
- மூட்டுவலி • உடல் பருமன்
- சொரியாசிஸ் • மாதவிடாய்
- ஆண்மை, குழந்தை இன்மை

இவை அனைத்திற்கும் டாக்டரின் ஆலோசனைப்படி மருந்துகள் தரப்படும்.



- அனைத்து சுபகாரியாரியங்களுக்கு மற்றும் கோயில் கும்பாபிஷேகத்திற்கு பூஜை பொருட்கள் கிடைக்கும்.
- சித்தா & ஆயுர்வேதிக் மருந்துகள் கிடைக்கும்
- உலர் பழங்கள் மற்றும் மசாலா கிடைக்கும்
- மூலிகைப் பொடி மற்றும் சூரணம் கிடைக்கும்
- சுத்தமான மர செக்கு எண்ணை மற்றும் தேன் கிடைக்கும்



Super Stockist for Kaviraj Sidha Pharmaceuticals

Distributor for Gurudeva Puthoor power, Sugar Nivaranam & Topten
Distributor for Maarthandam Honey foods
Distributor for Jayam Mara Chekku Nalla Ennai
Distributor for Herbal Powders
Stockist for medipro marketers

**அனைத்து விதமான நாட்டு மருந்து மற்றும் மூலிகைப் பொருட்கள் கிடைக்கும்**




– தனுவசீ –

## வாசகர் பார்வையில்

**ஊ**ன்றிப் படிக்க ஊன்றி எழ பெரியார் கைத்தடி

**– கு.செல்வேந்திரன், சென்னை**

**ந**டப்பில் உள்ள சிற்றிதழ்களில் உண்மை நோக்கத்துடன் செயல்படும் ஒரு இதழ், தினம் தினம் அறிந்துகொள்ள வேண்டிய செய்திகளை திங்கள் தோறும் கொடுக்கும் அறிவு பெட்டகமே கைத்தடி மாத இதழ். தேவையற்ற விளம்பரங்கள் இல்லாத பகுத்தறிவு இதழாக பார்க்கிறேன்...

இதழ் குழுவிற்கு என் வாழ்த்துக்களை பகிர்கிறேன் ..!

**– சுபாஷினி, திருப்பூர்**

**ச**மூக அவலங்களை தோலுரிக்கும் இதழாக செயல்பட்டு வருகிறது. மக்களைப் புரட்சிப் பாதையில் வழிநடத்தும் ஆயுதம்... தொடர்ந்து செயலாற்றுங்கள்.

**– சந்தியா, திருச்சி.**

**இ**தழும், இதழில் வெளிவரும் கருத்துக்களும் தரம்...

வாழ்த்துக்கள்

**–நஞ்சப்பன், சேலம்.**

## பொதுத் தொண்டு

**ஊ**ராட்சித் தலைவர் அவர்களே, தாய்மார்களே, பெரியோர்களே,

ஏதோ மனிதனாகப் பிறந்தோம்: சுயநலத்திற்கு ஏற்ப வாழாமலிருக்க வேண்டுமென்று கருதுகிறோம். நம் வாழ்வின் பயனாகத் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தொண்டாற்றி வருகிறேன். பலர் கருதுகிறார்கள் - நான் பொது மக்களுக்காகத் தொண்டாற்றுகிறேன் என்று: ஒரு மாதிரியில் அந்தக் கருத்து சரி. இந்த நாட்டில் பார்ப்பானைத் தவிர மற்றவர்களெல்லாம் பொதுமக்களுக்குப் பாடுபடுகிறவர்கள்தாம். உலகத்தில் மனிதனாக உள்ள அனைவரும், பார்ப்பானைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பொதுமக்களுக்குத் தொண்டாற்றுகிறவர்கள்தாம்.

சாதாரணமாக அருவருப்பாகத் தோன்றும் கக்கூஸ் சுத்தம் செய்யும் (மலம் எடுப்பது) வேலை முதல், அரசனாக இருந்து ஆட்சிபுரிகிற வரையில் எல்லோருடைய வேலையும் பொதுத் தொண்டுதான்.

கக்கூஸ் எடுக்கிறான் என்றால் தனக்கு மட்டுமா எடுக்கிறான்? வேலைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள். உத்தியோகம் செய்பவன், விறகு வியாபாரம் செய்பவன், மற்றும் பல வியாபாரிகள், தொழில் செய்வோர்கள் இவர்களை எடுத்துக்கொண்டால் அவனவன் செய்கிறதெல்லாம் - அது அவனுக்கு மட்டுமல்ல.

உயர்வு - தாழ்வு என்னவென்றால், அதன் மூலம்தான் தன் வாழ்வை வளப்படுத்திக் கொள்கிறான் என்கிறோமே தவிர வேறு வகையில் அது தொண்டு தான். மற்றவனுக்குள்ள வசதி வாய்ப்பு, அமைப்பு இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, இலாபம் பார்த்துக் கூலி பார்த்துச் செய்கிறார்கள் என்று சிலரைக் கூறலாமே தவிர அவர்கள் இறக்கும்போது எடுத்துக்கொண்டா போகிறார்கள்? அவைகளை விட்டுவிட்டுத்தான் போகிறார்கள். மற்றவர்கட்குத்தான்'' 'அது நம் மகனுக்கு'', 'அல்லது நம் மனைவிக்கு'' என்று நினைப்பார்கள். கணக்குப் பார்த்தால் அவர்களும் (மனைவி, மக்களும்) மற்றவர்கள்தாம். தனக்கு என்று ஒன்றும் இல்லை. பொதுத் தொண்டில், தனக்கு என்று ஒன்றைச்செய்கிறவர்கள் சிலர்தான்.

தேடி வைத்தவர் யாரென்றால், மற்றவர்களைத் தேடாமல் - எதிர்பாராமல் தொண்டாற்றிப் போகும் அத்தனைபேரும்: அவர்கள்தாம் தமக்கென்று புகழைத் தேடிக்கொண்டு போகிறார்கள்?: பிரதியுபவகாரம் இல்லாமல் தொண்டு செய்பவர்கள் என்ற பெயரைத் தம்மோடு எடுத்துப் போகிறார்கள். உலகத்தில் அது இருக்கிற வரையில் தம் பெயர் நிலைக்கும்படி செய்துவிடுகிறார்கள். நிலம், காணி இவையெல்லாம் எவ்வளவுதான் சேர்த்து வைத்திருந்தாலும் அவன் செத்துப் போனதும் அவனது என்று சொல்லமாட்டார்கள். அவனுடைய மகனது என்றுதான் கூறுவார்கள்: இது இயல்பு. தனது என்று கூறும்படியானது தொண்டு ஒன்றுதான். மற்றவர்களுக்காகப் பலனை எதிர்பாராமல் தொண்டு செய்வதுதான்.

**(தேரெழுந்தூரில், 31–3–1959–இல் சொற்பொழிவு**
**– விடுதலை 11–4–1959)**

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

உதவி ஆசிரியர்:
**கா. தமிழரசன்**

ஆசிரியர் குழு:
**புலவர் நாகை பாலு** த.மு.எ.ச.
**முனைவர் கு. முருகேசன்**
**முனைவர் ச.அருண்பிரகாஷ்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன், ஜோதி வெங்கடாஜலபதி**

ஓவியர்கள்:
**தனுவசி சி.தர்மராஜ், ஓவியர் சிகரன்,**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப்,** 76677 55673

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி, தே.சுரேஷ், அரவிந்த், கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா,** வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்,** வழக்கறிஞர்

ஆசிரியர் குழு – அலுவலக முகவரி

கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

**மதி பப்ளிகேசன்**
2/343, காமலாபுரம் (கி), மல்லிக்குட்டை (அ),
காரிமங்கலம் (வ), தருமபுரி – 635 205.
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்: kaithadimonthly@gmail.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| மறைக்கப்படும் வரலாற்றுப் போராட்டம்! | 5 |
| நீட் கொடுமைகளைக் கொட்டித் தீர்க்கும் +2 மாணவி திருச்சி சந்தியா | 8 |
| மந்திரமா? தந்திரமா? | 9 |
| திராவிடத்தால் வீழ்ந்தோமா...? வாழ்கிறோமா...? | 10 |
| தமிழ்நாடு இந்தியாவின் அண்டை நாடா? | 12 |
| பெண் என்றால் மானுடம் | 15 |
| நம் உரிமைக்குரல் காவிரி | 16 |
| தமிழர் விளையாட்டுகள் | 18 |
| அறிந்து கொள்வோம்: PCOS | 20 |
| வழக்கறிஞர் அ.அருள்மொழி – நேர்காணல் | 22 |
| கடவுள் சக்தி அல்ல; மனித சக்தியே! | 28 |
| தூக்குத் தண்டனை தீர்வாகுமா? | 30 |
| எச்சில் தொட்டி | 32 |
| அந்த தாமரைக்குளமும் நாங்களும்! | 34 |


## கைத்தடி சந்தா விபரம்

தனி இதழ் ₹ 20

| | |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 250 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 470 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 950 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1200 |

A/C NO: 34939017347
IFSC CODE : SBIN0000832
NAME : ARIVAZHAGAN.C
PHONE NO : 7373333078
State Bank of India, Dharmapuri

**தமிழினி** மாநில செயலாளர், இளைஞரணி, விடுதலைச்சிறுத்தைகள் கட்சி



# மறைக்கப்படும் வரலாற்றுப் போராட்டம்!

இந்திய நாட்டில் பல தலைமுறைகளாக இருந்து வரும் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பாதுகாப்புச் சட்டம் தான் எஸ்.சி./எஸ்.டி., வன்கொடுமை தடுப்புச் சட்டம் (*SC/ST Prevention of Atrocities Act 1989*) ஏற்கனவே நடைமுறையில் இருந்த இச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்கவில்லை. இன்று ஒரு சதவீதம் கூட இந்த சட்டத்தை இந்த அரசு முறையாகச் செயல்படுத்தவில்லை. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். முறையாக நடைமுறைபடுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இச்சட்டம் சரியாகச் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மாநில அளவில் முதலமைச்சரை தலைவராகக் கொண்ட 25 பேர் கொண்ட குழு இருக்க வேண்டும், ஆறு மாதத்திற்கு ஒருமுறை வழக்குகளின் நிலை குறித்து ஆராய வேண்டும், மாவட்டங்கள் தோறும் சிறப்பு நீதிமன்றங்கள், சிறப்பு காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் போன்ற வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தில் உள்ள விதிமுறைகள் எந்த ஒரு மாநிலத்திலும் முறையாக கடைப்பிடிக்கப்படவில்லை. உண்மை நிலை இவ்வாறு இருக்க, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதாக உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், கடந்த மார்ச் மாதம் 20 ஆம் தேதியன்று நீதிபதி அ.கு.கோயல், வ.லலித் இவர்களைக் கொண்ட அமர்வு தலித் மக்களின் நம்பிக்கையைத் தவிடு பொடியாக்கும் அளவில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்து அறிவித்திருக்கிறது. அதன்படி அரசு ஊழியர் ஒருவர் மீது அளிக்கப்பட்ட புகாரின் பேரில் அவரை உடனடியாகக் கைது செய்யக்கூடாது என்றும் அரசு ஊழியர் என்றால் அவரின் நியமன நிர்வாகத்தில் அனுமதி பெற்ற பின்னரே மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி.) தலைமையில் உரிய விசாரணை நடத்தி முகாந்திரம் இருந்தால் மட்டுமே கைது செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் உச்சநீதிமன்றம் மேற்கொண்ட இத்திர்ப்பை எதிர்த்து வடமாநிலங்களான மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம், ராஜஸ்தான், பீகார், ஜார்கண்ட், டெல்லி உட்பட பல வட மாநிலங்களில் கடந்த ஏப்ரல் 2-ஆம் தேதி 'பாரத் பந்த்" அறிவிக்கப்பட்டு தலித் அமைப்புகளை ஒன்று கூடி போராடினர். பல இடங்களில் போராட்டங்கள் வன்முறையாக மாறின. நாடு முழுவதும் 12 பேர் கொல்லப்பட்டனர். முதலில் பலியானவர்கள் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானதாகக் கூறப்பட்டது. பின்னர் ஒரு தொலைக்காட்சி துப்பாக்கிச் சூட்டை பா.ஜ.க.வினர் நடத்தியதாக உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. தமிழ்நாட்டிலும் அன்றைய தினம் தன்னெழுச்சியாக போராட்டங்கள் நடைபெற்றன.

ஏப்ரல் 16-ஆம் தேதி சென்னையில் எதிர்கட்சியினர் தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின்

தலைமையில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்துக்கு எதிரான உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மைய அரசு மேல் முறையீடு செய்ய வேண்டுமென வலியுறுத்தியும் வன்கொடுமைகள் தடுப்புச்சட்டத்தை அரசியல் அமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் இணைக்க வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தோழமைக் கட்சித் தலைவர்களான ஆசிரியர் கி.வீரமணி, தொல். திருமாவளவள், திரு. வை.கோ, திருநாவுக்கரசர், ஜவாகிருல்லா, முத்தரசன், கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வடமாநிலங்களில் நடைபெற்ற வீரியமிக்க போராட்டங்கள் தமிழகத்திலும் நடைபெற வேண்டும் என்ற எண்ணம் தலித் மக்களிடையேயும், தலைவர்களிடையேயும் மேலோங்கியது. இந்நிலையில் தமிழகத்தில் உள்ள முக்கிய தலித் தலைவர்கள் ஒன்று கூடி ஏப்ரல் 24 அன்று சென்னை பனகல் மாளிகையில் மாபெரும் எழுச்சிப் பேரணி நடத்துவது என தீர்மானித்தனர்.

திட்டமிட்டவாறு ஏப்ரல் 24 அன்று வரலாற்றுச் சிறப்புமிக்க பேரணிக்காக ஆயிரக்கணக்கில் நீலக்கொடியை ஏந்தி பெண்களும் இளைஞர்களும், குழந்தைகளும் எழுச்சியோடு கலந்துகொண்டனர். நீல நிறக்கடல் திரண்டு வந்தது போன்றும், நீல நிற வானமே இறங்கி வந்தது போலும் எங்கு பார்த்தாலும் புரட்சியின்அடையாளமென நீல நிறமாகவேக் காட்சியளித்தது. நூற்றுக்கணக்கான காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். பாதுகாப்பு பணி என்று குறிப்பிடுவதை விட அடக்குமுறைகளுக்கு தயாராகக் குவிக்கப்பட்டிருந்தனர். அவ்வப்போது காவல்துறை உயரதிகாரிகள் நேரத்தை நினைவுப்படுத்திச் சென்றனர். வலைதளப் பக்கங்கள் பேரணி பற்றிய செய்திகளால் நீல நிறமாகவே மாறியிருந்ததன.

ஆர்ப்பாட்டத்தில் தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் பேசும்போது… வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் தீர்ப்பைச் செல்லாததாக்க வேண்டும்

**தலித் மக்கள் துப்பாக்கிகளுக்குப் பயப்படக்கூடியவர்கள் அல்ல. அரசியலையும் தாண்டி ஒன்று திரளக்கூடியவர்கள் என்பதற்கு இந்தப் போராட்டம் ஒரு சான்று. தலித் மக்களும் தலைவர்களும் அரசியலுக்காக ஆளுக்கொரு பக்கம் சிதறிக் கிடக்கிறார்கள் என எண்ணியிருந்த நிலையில், எல்லாக்காலத்திலும் நாங்கள் பிரிந்து கிடக்க மாட்டோம், சூழ்ச்சிகளை எல்லாம் முறியடிக்கும் வகையில் ஒன்றிணைவோம் என சூளுரைத்து அமைந்ததாக இருந்தது இந்த எழுச்சிப் பேரணி...**

என்றால் மோடி அரசு அவசரச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும். எந்தக் காலத்திலும் இந்தச் சட்டத்தைச் சீண்டிப்பார்க்காத அளவுக்கு இதை அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும்.

பிரதமர் மோடியோ இத்தீர்ப்பை ஆதரிக்க முடியாது என்கிறார். ஆனால், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் மட்டும் இந்தத் தீர்ப்பைச் செயல்படுத்த முயற்சி நடந்தது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அப்பட்டமான அநீதி. இது ஒரு வன்கொடுமை. இதை எதிர்த்து 500 மாவட்டங்களில் ராகுல் காந்தி போராட்டம் நடத்துகிறார். மார்க்சிஸ்ட் கட்சியின் மாநாட்டில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை 9-ஆவது அட்டவணையில் இணைக்கத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். அவர்களைக் கேள்வி கேட்காத பா.ம.க. நிறுவனர் ராமதாஸ், திமுக-வுக்கும் அ.தி. மு.க.வுக்கும் கேள்வி எழுப்புகிறார். அகில இந்திய அளவில் முலாயமோ, லாலுவோ, மம்தாவோ வடமாநிலத்





தலைவர்கள் யாரும் இதனை எதிர்க்கவில்லை.

வடமாநிலங்களில் எந்தத் தலைவரின் அழைப்புமில்லாமல் இலட்சக்கணக்கில் தலித் மக்கள் திரண்டனர். துப்பாக்கிச் சூட்டில் 12 பேரை கொன்றீர்கள். இளைஞன் ஒருவன் பட்டேல் சமூகத்தினரை லட்சக்கணக்கில் திரட்டி குஜராத்தில் போராட்டம் நடத்தினார். குஜ்ஜார் இன மக்கள் நான்கு நாட்கள் இரயிலை நிறுத்திப் போராடினர். ஒட்டு மொத்த இந்தியாவே துண்டாடப்பட்டது.

அப்போதெல்லாம் தடியடி, துப்பாக்கிச் சூடு நடந்ததா? அப்பாவி ஏழை எளிய மக்கள் போராடினால் துப்பாக்கிச் சூடு நடத்தி 12 பேரைப் படுகொலை செய்திருக்கிறீர்கள். ஒரு சதவீதம் பேர் கூட இச்சட்டத்தால் தண்டிக்கப்படவில்லை. உண்மையில் நடைமுறைக்கே வராத சட்டத்தால் பாதிப்பு பாதிப்பு என அலறுகிறார்கள். எந்தச் சட்டம் தவறாக பயன்படுத்தப்படவில்லை?

வருமான வரிச்சட்டம் தவறாக பயன்படுத்தப்படவில்லையா? அமலாக்கப்பிரிவுச் சட்டம், ஐ.பி.சி. சட்டம், குடும்ப வன்முறைச் சட்டம் ஆகியன தவறாகப் பயன்படுத்தப்படவில்லையா? எந்தச் சட்டத்தை காவல்துறை முறையாகப் பயன்படுத்தியிருக்கிறது. நாங்கள் எந்த குறிப்பிட்ட சமூகத்துக்கும் எதிரானவர்கள் அல்ல... சாதி வெறிக்கு எதிரானவர்கள், மதவெறிக்கு எதிரானவர்கள் என்று பேசினார்.

இந்தியக் குடியரசுக் கட்சியின் தலைவர் செ.கு. தமிழரசன் பேசுகையில்:

*1949 முதல் 1955, 1984, 2012 என ஏறத்தாழ 60 ஆண்டுகள் மாறிமாறி வலுச்சேர்க்க வேண்டும் என வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட 1989, வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தை தனி நபரின் வழக்கிலே உச்சநீதிமன்றத்தில் இதை நீர்த்துப்போகச் செய்யும் அளவுக்கு தீர்ப்பு வழங்கியிருப்பது "வன்கொடுமை" என்று குறிப்பிட்டார்.*

தமிழக மக்கள் முன்னேற்றக்கழகத் தலைவர் ஜான் பாண்டியன் பேசுகையில்,

*தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்பாகக் கொடுக்கப்படும் தீர்ப்புகள் சரியாக இருக்க வேண்டும். சட்டத்தின் அடிப்படையில் யாரையும் எதையும் எதிர்ப்போம் எதிரடி கொடுப்பதே எம் வேலை என்றார்.*

புரட்சிப்பாரதம் கட்சித் தலைவர் பூவை ஜெகன் மூர்த்தி பேசுகையில் :

*மதுரை மேலவளவிலே ஏழு பேர் கொல்லப்பட்டனர். விழுப்புரம் கலவரம் நடந்தது, தர்மபுரி இளவரசன் விவகாரம் இதிலெல்லாம் குற்றவாளிகளுக்கு என்ன தண்டனை கிடைத்தது என கேள்வி எழுப்பினார்.*

இது போன்று பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் ஆம்ஸ்ட்ராங், ஆதித் தமிழர் மக்கள் கட்சித் தலைவர் எஸ்.டி.கல்யாண சுந்தரம் ஆகியோர் பேசினர்.

முடிவில் ஆளுநர் மாளிகை வரை தலைவர்கள் சென்று கோரிக்கை மனு அளித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போதும், பேரணியின் போதும்



இடையிடையே பறை இசை, வாள் வீச்சு உள்ளிட்ட தமிழர் பண்பாட்டுக்கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. "வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை வஞ்சிக்காதே" என விண்ணை முட்டும் அளவில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

தலித் மக்கள் துப்பாக்கிகளுக்குப் பயப்படக்கூடியவர்கள் அல்ல. அரசியலையும் தாண்டி ஒன்று திரளக்கூடியவர்கள் என்பதற்கு இந்தப் போராட்டம் ஒரு சான்று. தலித் மக்களும் தலைவர்களும் அரசியலுக்காக ஆளுக்கொரு பக்கம் சிதறிக் கிடக்கிறார்கள் என எண்ணியிருந்த நிலையில், எல்லாக்காலத்திலும் நாங்கள் பிரிந்து கிடக்க மாட்டோம், சூழ்ச்சிகளை எல்லாம் முறியடிக்கும் வகையில் ஒன்றிணைவோம் என சூளுரைத்து அமைந்ததாக இருந்தது இந்த எழுச்சிப் பேரணி....

தமிழ்நாட்டில் தற்போது தேவையினடிப்படையில் தமிழக தலித் தலைவர்கள், அமைப்புகள் ஒன்றிணைந்திருப்பது தமிழக அரசியலில் ஒரு முக்கியமான மாற்றமாக பார்க்கப்படுகிறது.

இங்கு ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான வன்கொடுமைகள் குறைய வேண்டுமானால் தலித் மக்களின் அரசியல் பலம் அதிகரிக்க வேண்டும், ஆட்சி அதிகாரத்தில் தலித்துகள் வரவேண்டும்.

தலித் இயக்கங்கள் சிதறிக்கிடப்பது சாதிய சக்திகள் கொள்ளிக்கட்டைகளையும், வீச்சறிவாள்களையும் வீசுவதற்கு ஏதுவாக அமையும்.

பொது எதிரிகளை அடையாளங்கண்டு புரட்சிகரமான நீல நிறக் கொடிகளை பறக்க விட்டு காவிகளை இறக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் தலித் இயக்கங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்த ஒற்றுமைக்காக பல வருடங்கள் காத்திருந்தோம், இந்த ஒற்றுமை நீடிக்க வேண்டும் என்பது போன்ற குரல்கள் பேரணியில் கேட்க முடிந்தது.

செய்தித்தாள்களும், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும் இந்த மாபெரும் தலித் எழுச்சிப் போராட்டத்தை மறைக்க முயன்றாலும் வரலாறு இப்போராட்டத்தை தன் பக்கங்களில் பொன் எழுத்துக்களால் எழுதும். ●






# நீட் கொடுமைகளைக் கொட்டித் தீர்க்கும் +2 மாணவி திருச்சி சந்தியா

ஆயிரத்தில் மதிப்பெண் இருந்தும் ஆயிரமாயிரம் கவலைகள் தோன்றுகின்றன பொதுத்தேர்வு எதிர்கொண்ட மாணவர்கள் மனதினில். ஆடிப்பாடி புத்துணர்ச்சியுடன் கொண்டாட வேண்டிய மாணவர்கள் மனதினை ஆட்டிப்படைப்பதாய் உள்ளது நீட் தேர்வு. ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் கனவுகளை ஏக்கமாக்கும் வைரஸாகவே இது பரவி வருகிறது. அடிப்படைக் கல்வி முதலே மத்திய அரசின் கீழ் படித்து வரும் மாணவனுடன் மாநில சமச்சீர் கல்வி முறையையே பயின்று வரும் மாணவன் எவ்வாறு சரிநிகராகப் போட்டியிட முடியும்? இதனை நன்கறிந்த மத்திய அரசும், அதற்கு உடன்போகும் உச்சநீதிமன்றமும் இரு பிரிவினரையும் ஒரே அளவு கோலினால் அளக்க முற்படுவது என்ன நியாயம்? இந்தியா முழுவதும் மத்திய பாடத்திட்டத்தினைத் திணிப்பதற்கான ஓர் ஆயுதமாகவே நீட் தேர்வினைக் கையில் எடுத்துள்ளது அம்பலம். இது மேல் வர்க்கத்தினை மட்டுமே ஆதரிக்கும் செயலாக உள்ளது.

பெரும்பாலும் மத்திய பாடத்திட்டத்தின் கீழ் பயிலும் மாணவர்களும் வசதியின் மூலம் சிறப்பு வகுப்பிற்கு செல்பவருமே அரசு கல்லூரி இடங்களைத் தட்டிச் சென்று விடுகின்றனர். இதன் காரணமாக பொதுத்தேர்வில் நிறைய மதிப்பெண் பெற்றிருந்தாலும், இத்தேர்வினால் சுயநிதிக் கல்லூரிகளில் பல லட்சங்கள் செலுத்தி பயிலும் நிலையே நடுத்தர வர்க்கத்தினருக்கு உண்டாகின்றது. இதனைப் பயன்படுத்தி அதிக பணம் வசூலித்து வகுப்பு நடத்தும் அசாதாரண நிலையே நிலவுகிறது. காலை முதல் மாலை வரை வகுப்பு நடத்தி மாணவர்களை ஓர் உளவியல் ரீதியான அச்சுறுத்தலுக்குள் கொண்டு செல்கின்றனர். இதைப் போன்ற ஓர் சூழலில் தான் மாநில பாடத்திட்டத்தின் கீழ் பயின்ற மாணவர்கள் தேர்வை அணுகுகின்றனர்.

தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கானத் தொகையைச் செலுத்தவே பலர் இன்னல் படும் வேளையில், தேர்வு மையங்களைப் பல கிலோமீட்டர்கள் தாண்டி அமைத்திருப்பது அவலத்திலும் அவலம். மத்திய மாநில அரசுகள் எத்தனையோ போட்டித்தேர்வுகள் நடத்திய போது தமிழகத்தில் இருந்த இடங்கள் தற்போது எங்கே சென்று விட்டன? இதில் தமிழக மாணவர்களுக்கு மட்டும் தான் அவர்கள் விருப்பமின்றி பிற மாநிலங்களில் தேர்வு மையம் அமைக்கப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, குறித்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்தை அடைவதற்குள் தேர்வர்களும் பெற்றோரும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகினர். தேர்வு வளாகத்திற்குள் நுழைவதற்கான நேரம் சிலருக்கு 7.30 மணியாக இருந்ததனால் பலரால் உணவு





உண்ண இயலவில்லை. இது போதாதென இந்த ஆண்டு முதல், ஆயுர்வேதம் சித்த மருத்துவம் போன்ற படிப்புகளுக்கும் நீட் தேர்வு கட்டாயமாக்கப் பட்டுள்ளது. கல்வி வியாபாரம் ஆக்கப்பட்டு வருவதே இதன் பின்னணி.

மேலும், நீட் தேர்வு எழுதச் சென்ற மாணவிகள் துப்பட்டா அணிய அனுமதிக்கப் படவில்லை. இதனைப் போன்ற விஷயங்கள் தனிநபர் சார்ந்தவை. துப்பட்டா பறிக்கப்பட்ட பெண்களின் புகைப்படத்தை பெரிதளவில் பரப்புவதை விட அநாகரிகம் வேறென்ன இருக்க முடியும்? தீவிரவாதிகளை சோதிப்பதைப் போல் காதுக்குள் டார்ச் அடித்தது போன்ற செயல்களினால் அனைவரும் வேதனை அடைந்தனர்.

இத்தேர்வு ஒவ்வொரு ஆண்டும் சில உயிர்களையாவது பறித்துச் சென்று விடுவது வெளிப்படை. அனிதா அக்காவின் முடிவு இனி எவராலும் தேர்வு செய்யப் படக்கூடாத முடிவு. ஆனால், அவரின் பின்னணியும் படிப்பும் அனைவருக்கும் ஊக்கமளிக்க வல்லது. அவர் இந்த சமூகத்திற்கானவராக வாழ்ந்திருக்க வேண்டியவர். அதிகாரமும் அநீதியும் செய்த இந்த படுகொலையினால் ஏற்பட்ட இழப்பை எவரால் ஈடு செய்ய முடியும்? இத்தகைய ஓர் முடிவை எடுக்க அவர் மனம் கடந்து வந்த பாதையை வார்த்தைகளால் விளக்க இயலாது. அனிதா என்பவர் ஓர் சாதிக்குள் அடக்கப்படக் கூடாதவர். தன் தகுதிக்கான தீர்ப்பிற்காக அவர் போராடினார் என்பதே நிதர்சனம். நம் நாட்டின் நீதிமன்றங்களில் நிற்கும் நீதி தேவதைகளின் கண்கள் கட்டப்பட்டிருப்பதால் அனிதா என்னும் எழிலோவியத்தின் கண்ணீர் அவளுக்குத் தெரியவில்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது. எத்தனை சிரமங்கள் வந்தாலும் மகனை மருத்துவராக்க வேண்டும் என சென்ற தந்தை இறந்தது கூட தெரியாமல் மகன் தேர்வு எழுதிக் கொண்டிருந்தான். அந்த சிறுவனுடைய கேள்விக்கான பதிலை காற்றில் தான் தேட முடியும்.,. நீட் அனைவரின் மனதிலும் ஒரு நீள் துயரமாகவே மாறி விட்டது.

பொதுவாக ஓர் ஆண்டிற்கு அரசு மருத்துவக் கல்லூரியில் 13000 ரூபாயும், இதர கல்லூரிகளில் ஐந்து லட்சமும் வசூலிப்பது இயல்பாக இருந்தது. ஆனால், நீட் தேர்வு வந்ததற்குப் பின்னர் வெளிப்படையாகவே கோடிக்கணக்கான ரூபாய் கட்டணமாக வசூலிக்கப் படுகிறது. "மருத்துவ படிப்பு இல்லையென்றால் வேறு படிப்பே இல்லையா?" என கேட்கும் நபர்கள் தான் இங்கு ஏராளம். நீட் என்ற ஒற்றைச் சொல்லால் எத்தனை எத்தனையோ மாணவர்களின் கனவுகள் பறிபோகும் நிலை நிகழ்ந்து வருகிறது. இவை அனைத்தும் விளிம்பு நிலை மக்களுக்கு எதிரான தந்திரம்.

ஆக தொலை தூரத்தில் தேர்வு மையம், அலைச்சல், ஆடைக் கட்டுப்பாடு என அனைத்தையும் எதிர்கொண்டு தான் தேர்வெழுதச் செல்ல நேர்ந்தது. தன் கனவுகள் எவராலோ தட்டிப் பறிக்கப் படுகிறது என அறிந்தும் அவனால் எப்படி விரக்தி அடையாமல் இருக்க முடியும். சர்வாதிகாரம் என்னும் ஓங்கிய கையின் விரல்கள் என்றேனும் துண்டிக்கப் படும்.. அந்த நாளை நோக்கி தமிழகம்..! ●

பேரா. பழ.வெங்கடாசலம் மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



## மேஜை மீது நாணயத்தை வைத்து அதன்மீது சீட்டை வைத்து மூடியபின் நாணயம் மாயமாய் வேறு இடத்திற்கு வருதல்

### தேவையானப் பொருட்கள்

நான்கு ஒரேமாதிரி நாணயம் மற்றும் நான்கு சீட்டு

### மேஜிக் செய்யும் முறை

மேஜை மீது நான்கு இடங்களில் நான்கு ஒரேமாதிரி நாணயம் வைத்து விடவும். தனித்தனியாக நான்கு சீட்டுக்களை அதன் மீது வைத்து மூடவும்.


ஒவ்வொரு சீட்டின் கீழ் ஒரு நாணயம் இருப்பதை பின் தனித் தனியே எடுத்துக் காட்டி உறுதி செய்யவும்.

மந்திரம் போடுவது போல் கைகளை ஆட்டி அசைத்து முணுமுணுத்து சீட்டுகள் மீது கையை அமைக்கவும். பின்னர் சீட்டை எடுத்து காட்டும் போது அந்த இடத்தில் நாணயம் இருக்காது. வேறு சீட்டை எடுத்துப் பார்த்தால் அங்கே இரண்டு நாணயங்கள் ஓரிடத்தில் இருக்கும்.

இப்படி மாற்றி மாற்றிச் செய்ய நான்கு நாணயங்களும் ஓரிடத்தில் இருக்கும்.

### மேஜிக் இரகசியம்

முதல் கார்டு வைக்கும் போது அடியில் உள்ள நாணயத்தை லாவகமாகச் சீட்டோடு எடுத்துக் கொள்க இதேபோல் மற்றவற்றையும் வேகமாக கார்டை மாற்றி மாற்றி வைத்து பார்வையாளரை ஆச்சரியத்தில் அசத்துங்கள். இதை நீங்கள் தனியே பலமுறை செய்து பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். ●





▪ ஜூன் 17 – சர்வதேச வறட்சி எதிர்ப்பு நாள்

# திராவிடத்தால் வீழ்ந்தோமா...? வாழ்கிறோமா...?

*சீர்தியால், அறத்தால் செழுமையால், வையப்*
*போர்த்திறத்தால் இயற்கை புனைந்த*
*ஓருயிர் நான். என் உயிர் இனம் திராவிடம்.*
*ஆரியன் அல்லேன் என்னும் போதில்*
*எத்தனை*
*மகிழ்ச்சி. எத்தனை*
*மகிழ்ச்சி.*

– புரட்சிக் கவிஞர்



திராவிடத்தால் வாழ்கிறோம் என்றே எங்கெங்கும் முழங்குங்கள். ஏனெனில் வீழ்ந்துக் கிடந்த நம் இனம் வீறுகொண்டு எழுந்த வரலாறு அதில் பின்னிப்பிணைந்துள்ளது. திராவிடம். உச்சரிக்கும் போதே மொழி உணர்வுடன் இன உணர்வும் பீறிட்டுக்கிளம்பும்.

நான்கு வருணங்களையும் நானே படைத்தேன் என்பதை ஏற்கவைப்பது ஆரியம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என ஓங்கி ஒலிப்பது திராவிடம். ஆரியத்தின் அத்தனை அடக்குமுறைகளுக்கும் எதிரான போர்க்குரல், 'அனைவருக்கும் அனைத்தும்" என்ற திராவிடத்தின் சமூகநீதிக் கோட்பாடே. இத்தகைய சுயமரியாதைக் கோட்பாட்டின் அமைதிப்புரட்சியை வரலாறே உரக்கச் சொல்லும்.

## நாம் திராவிடர்

திராவிடம் எனும் சொல் ஏதோ திடீரென முளைத்துவிட்டதல்ல... இந்த நாட்டின் பூர்வகுடி மக்களை திராவிடர் என்றே பல நூற்றாண்டுகளாக வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. *1856*-இல் கால்டுவெல் என்ற அறிஞர் 'திராவிட மொழிக் குடும்பங்களின் ஒப்பிலக்கணம்" என்ற தமது நூலில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவை ஒரே மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்பதை ஆதாரங்களோடு நிறுவினார். இவற்றுள் தமிழே மூலமொழியாக இருந்தது. தமிழில் பிறமொழி கலந்ததாலே ஏனைய மொழிகள் கிளைத்தன.

தமிழ்தான் தமிழம்-த்ரமிள - திரமிட - திராவிட - திராவிடம் என்று திரிந்தது - (ஆதாரம் - தேவநேயப் பாவாணரின் ஒப்பியன் மொழி நூல்).

எனவே, திராவிட மொழியின் இனப்பெயர் திராவிடம். அதுவே நமக்கானது. ஆதலால், நாம் திராவிடர்.

## புரட்டிப் பார்ப்போம் வரலாற்றின் பக்கங்களை.

*ஜாதி தர்மத்தை அனுசரிக்காதவர்களுக்குப் பிறந்தவர்கள் திராவிடர்கள்...*

*திராவிட தேசத்தை ஆண்டவர்கள் சூத்திரர்கள் - மனுஸ்மிருதி*

**(10–ம் அத்தியாயம் 43, 44–ஆவது சுலோகம்).**

ஆங்கிலேயர் ஆட்சி நம் நாட்டில் வேரூன்றுவதற்கு முன் அரசர்களிடம் மனுதர்மமே செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனால், பெரும்பான்மை உழைக்கும் மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்படுத்தப்பட்டவர்களாகவும் வரையறை செய்யப்பட்டு கல்வி மறுக்கப்பட்டு, சிந்திக்கும் திறனற்று தன்மானமின்றி வாழும் வருந்தத்தக்க நிலை இருந்தது. *1901*-இல் ஆங்கிலேயரால் எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி தமிழரில் படித்தோர் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவு.

நம் முப்பாட்டன் முதல் இப்பாட்டன் வரை அனைவருக்கும் படிப்பு வாசனை அறவே இல்லை. படிக்க மட்டுமல்ல உடுக்க உரிமையில்லை, நாடார் சமூகம் பெண்கள் இரவிக்கை அணியத்தடை... உணவகங்களில் உண்ண உரிமையில்லை... சென்னையிலே உணவு விடுதிகளில் பஞ்சமர்களும் நாய்களும் குஷ்டரோகிகளும் உள்ளே நுழையக்கூடாது என்று அறிவிப்பு வைத்திருந்த திமிர்தனத்தின் உச்சம்... பேருந்துகளில் பயணிக்க உரிமையில்லை, பஞ்சமர்களுக்கு இடமில்லை என்று டிக்கெட்டுகளில் அச்சிட்ட கொடூரம்... தெருக்களில் நடக்க உரிமை இல்லை... பொதுக்குளத்தில் தண்ணீர் எடுக்க உரிமையில்லை. *1932*-ஆம் ஆண்டு வரை 'புரதவண்ணான்" ஜாதியினரை கண்ணாலே காணக்கூடாது எனபதால் பகலிலே அவர்கள் வெளிவரக்கூடாது என்று ஜாதித்திமிர் தலைவிரித்தாடியது... விலங்கினும் கீழாக மனிதனை மனிதனே நடத்திய அவலநிலை... எங்கெல்லாம் தாங்க முடியாத கொடுமைகள் உள்ளதோ அங்குதான் புரட்சி வெடிக்கும் என்ற அடிப்படையிலே அடக்குமுறைகளுக்கு எதிர்வினையாக மீண்டும் துளிர் விட்டது திராவிடர் உணர்வு.

டாக்டர் நடேசனாரால் *1912*-இல் 'திராவிடர் சங்கம்' என்ற அமைப்பு உண்டானது. இதற்கு முன் *1894*-இல் அயோத்திதாசர் மற்றும் இரட்டைமலை சீனிவாசன் ஆகியோர் ஏற்படுத்திய திராவிட மகா ஜன சபாக்கள் இதற்கு முன்னோடியாக இருந்தன. திராவிடச் சங்கம் நீதிக்கட்சியாக உருமாறியப் பின் வலுப்பெற்றது.. நீதிக்கட்சி ஆட்சியிலே ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் ஒளிபிறந்தது. ஆரியம் மெல்ல மெல்ல ஆட்டங்காணத் துவங்கியது. பெரும்பான்மை மக்கள் கல்வி கற்க உரிமையும் வசதியும் செய்துதரப்பட்டது. மருத்துவம் உள்ளிட்ட எந்தப்படிப்பிற்கும் சமஸ்கிருதம் கட்டாயம் எனும் நிலை நீக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் பேருந்துகளில் பயணிக்கவும், தெருக்களில் நடக்கவும் உரிமைப் பெற்றனர். அரசாங்கப் பதிவேடுகளில் இருந்த "சூத்திரன்" என்ற இழிவானப் பட்டம் ஒழிக்கப்பட்டது.

ம.கவிதா

1922இல் தாழ்த்தப்பட்டோரை ஆதிதிராவிடர் என்றே அழைக்க வேண்டும் என்ற உத்தரவு வெளியானது. 1925-இல் வகுப்புவாரி உரிமைக்கேட்டு காங்கிரசை விட்டு வெளியேறி பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியதும் ஆரியத்தின் பழைமைக்கோட்டை மேலும் வலிமையோடு தாக்கப்பட்டது. சீனிவாசய்யங்காரின் அடுப்பங்கரை வரைச் செல்லும் உரிமை காந்தியாரின் மனைவிக்கே அப்போது தான் கிடைத்தது. சுயமரியாதைத் தீ கொழுந்துவிட்டு எரியத்துவங்கியதும் பத்திரிக்கை, சினிமா, நீதித்துறை, சட்டத்துறை, கலைத்துறை, அரசியல் மற்றும் அரசு அதிகாரிகள் அத்தனையும் பார்ப்பனமயம் என்ற நிலையில் மாற்றம் உருவெடுத்தது. இந்து அறநிலையத்துறை ஏற்படுத்தப்பட்டது. தரையில் பெண்களும், நாற்காலியில் ஆண்களும் என்ற நிலை மாறியது பெண்களும் ஓட்டுரிமைப் பெற்றனர்.

பெண்களை இழிவாகச் சித்தரிக்கும் மனுதர்மப் பார்வைக்கு மரண அடி கொடுக்கும் வகையில் தந்தை பெரியாரின் ‘பெண் ஏன் அடிமையானாள்” புத்தகம் உலகிலேயே இதுவரை பேசாத பெண்ணுரிமையைப் பேசியது. தம் குடும்பப் பெண்களையே பொதுவாழ்விற்கு கொண்டு வந்தார் பெரியார். தன் குடும்பத்திலேயே கைம்பெண் மறுமணம் செய்து புரட்சி செய்தார். பெண்களுக்கான மண விலக்கு உரிமை, சொத்துரிமை, கல்வி உரிமையெல்லாம் விவாதப்பொருளாயின. நிமிர்ந்தனர் திராவிடர். 1951-இல் முதன் முதலில் தந்தை பெரியாரின் போராட்டத்தால் இடஒதுக்கீட்டிற்காக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டு காமராஜர் அவர்களால் பல்லாயிரக் கணக்கானப் பள்ளிகள் திறக்கப்பட பெரியார் பெரும் உந்துசக்தியாக விளங்கினார். தமிழர்கள் படித்தனர். இன்றைக்கு தமிழகம் எங்கெங்கு காணினும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள்என அலங்கரித்திருக்கிறதே. பெயருக்குப் பின்னால் ஜாதிப் பட்டங்கள் இல்லாமல் கல்விப்பட்டங்களாய் மிளிர்கிறதே. இது திராவிடம் தந்த அருட்கொடை அல்லவா?



வெர்னாகுலர் (அடிமை மொழி) என்று சொல்லப்பட்டு வந்த தமிழ் மொழிக்கு அண்ணா அவர்களின் ஆட்சியில் தனி மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. மேடைகளில் அழகுத்தமிழ் அடுக்குமொழியில் முழக்கமாகியது. ஸ்ரீ திருவானது, வணக்கம் என்ற அழகிய சொல் எங்கும் ஒலித்தது. விவாக சுபமுகூர்த்தம், திருமணம் என்றானது, அழகிய தமிழ்ப் பெயர்கள் குழந்தைகளுக்குச் சூட்டப்பட்டது. தலைவர்கள் தங்கள் பெயரையெல்லாம் தமிழ்படுத்தினர். சென்னை மாநிலம் தமிழ்நாடு என்றானது. இந்திக்கு இடமில்லை இங்கே இருமொழிதான் என்று பலர் இன்னுயிர் தந்து போராடியதால் தான் இன்றைய நம் இளைஞர்கள் உலகத்தோடு போட்டிப்போட முடிகிறது. பெரியார் திருக்குறள் மாநாடு நடத்தினார். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்தார்.

மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, தாய்மொழி உணர்வு எனப்பலத் தளங்களில் புரட்சிக்கு வித்திட்ட சுயமரியாதைத் திருமணங்கள் சட்டவடிவம் பெற்றன. தொடர்ந்தது திராவிடர் ஆட்சி... மகளிர்க்கு சொத்துரிமைக் கொடுத்து இந்தியாவிற்கே வழிகாட்டியது கலைஞர் ஆட்சி. அரவாணிகள் என்ற பெயர் மாற்றப்பட்டது, திருநங்கைகள் என்ற பெயராலே அழைக்கப்பட்டு அவர்களுக்காக தனி வாரியம் ஏற்பட்டது, ஜாதி ஒழிப்பின் குறியிடாக அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகப் பயிற்சிப் பள்ளிகள்... சமத்துவபுரம் என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும். 69 சதவிகித இடஒதுக்கீடு.



இந்தியாவிலேயே 69 சதவிகித இடஒதுக்கீடு திராவிடர் ஆட்சியில் தன்னிகரற்றச் சாதனையாகும்.

ஒரு சமுதாயம் எழுச்சிபெற வேண்டுமானால் தங்களுடைய வரலாற்றை நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு துணிச்சலான சமூகநலத்திட்டங்களை முன்னெடுத்தது. அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் மதிய உணவு, பள்ளிகள், சுகாதார மய்யங்கள், சாலைகள், பொதுப் போக்குவரத்து, குடிநீர் பகிர்மானம், மற்றும் மின் இணைப்பு வழங்கல் ஆகியவற்றில் பெருவெற்றி பெற்றுள்ளது என்று பொருளாதார அறிஞர் அமர்த்தியாசென் அவர்களால் பாராட்டப்படும் அளவிற்கு பெருத்த மாற்றம் ஏற்பட்டது திராவிட இயக்கங்களின் சாதனை அல்லவா? அதனாலே உரக்கச் சொல்வோம் திராவிடத்தால் வாழ்கிறோம் என்று.

## திராவிட உணர்வை மேலும் கூர்மைப்படுத்துவோம்

இன்றைய அரசியல் சமூக சூழலிலும் பல்வேறு அறைகூவல்கள், நீட், நவோதயா வடிவிலும் சமூகநீதிக்கு எதிராய் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றன. இடஒதுக்கீடு என்பது ஒரு வறுமை ஒழிப்புத் திட்டமல்ல என்பதை வெகுமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். தகுதி-திறமை என்ற மாயவலையில் நம் மாணவர்கள் சிக்காமல் விழிப்புற நம் வரலாற்றை அறிய வேண்டும். ஆரியத்தின் வேர்கள் பல்லாயிரக்கனக்கான ஆண்டுகளாய் வேரூன்றியுள்ளது. இன்னமும் சமஸ்கிருத மந்திரங்களே நம்மை அடிமைப்படுத்தி வைத்துள்ளது. இன்னமும் நாம் நம் குழந்தைகளுக்கு சமஸ்கிருதப் பெயர்களை விரும்பிச் சூட்டுகிறோம். இன்னமும் பெண்களுக்கு எத்தனைக் கொடுமைகள், ஆணவக் கொலைகள் தொடர்கின்றன. மதத்தை அறிவியலோடு தொடர்புபடுத்தவும், வரலாற்றை திரித்து எழுதவும் ஆரிய சூழ்ச்சி தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறது. (கவனிக்க: விநாயகருக்கு யானைத் தலையைப் பொருத்தியது தான் உலகின் முதல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, குந்திதேவி தான் உலகின் முதன் முதலில் சோதனைக் குழாய் மூலம் குழந்தைப் பெற்றவர், பிரதமர் மோடி 7000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் ஆகாய விமானத்தின் பயன்பாடு இருந்தது, அய்ன்ஸ்டீன் தத்துவத்தை விட உயர்ந்த தத்துவம் வேதங்களில் உள்ளது.) மதத்தின் பேரால் மீண்டும் மனுதர்ம ஆட்சி தலைதூக்கிப்பார்க்கிறது. எனவே தான் ‘மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு” என்று சொன்ன திராவிடச் சிந்தனையை மேலும் மேலும் நாம் கூர்மைப்படுத்துவோம். திராவிடத்தாலே வெல்வோம். ●

# தமிழ்நாடு இந்தியாவின் அண்டை நாடா?

தற்போதைய தமிழ்நாட்டின் நிலையை நினைத்தால்... இந்த மாநிலத்தை, இந்திய நாட்டை ஆள்பவர்களை, நாங்கள்தான் ஆட்சியாளர்கள், இந்த நாட்டை ஆண்டுக் கொண்டிருப்பவர்கள் என்று சொல்பவர்களை! ஆடைகளை அவிழ்த்துவிட்டு! ''நடுரோட்டில்'' மக்கள் அனைவரும் ஆளுக்கொரு தடியை எடுத்து துரத்தித்துரத்தி அடிக்க வேண்டும். காரணம், அவ்வளவு கொடுமைகள் நாள்தோறும் புதிது புதிதாக நடந்து கொண்டிருக்கிறது, மத்திய அரசால் நடத்தப்படுகிறது. இங்குள்ள மா நில அரசோ அவைகளை எதிர்க்காமல், எதிர்த்து நிற்காமல் அவர்களுக்கு முட்டுக்கொடுக்கின்ற, சொம்பு தூக்குகின்ற வேலையைச் செய்கின்ற அரசாக உள்ளது. காரணம்! இந்த அரசுக்கு, ஆட்சியாளர்களுக்கு முதுகெலும்பு இல்லாதது. அதிகாரத்தை, ஆபத்தை எதிர்த்து! மக்களும், மக்கள் நலனில் உண்மையிலேயே அக்கறையுள்ள அமைப்புகள், இயக்கங்கள் போராட்டங்கள் நடத்தி எதிர்க்கவில்லை என்றால்! இந்த நாட்டையும், மக்களையும் எப்போதோ துடைத்து எடுத்து, தூர தூக்கி வீசியிருப்பார்கள்.

பொதுவாகவே அதிகாரம் என்ற ஒன்று கைக்கு வந்தவுடன், காமம் கண்ணை மறைக்கும் என்பார்களே! அதுபோல் இவர்களுக்கு, அதிகாரம் கைக்கு வந்தவுடன் அனைத்தையும் மறந்துவிடுகிறார்கள். இந்த அதிகாரம் தானாக வந்ததா? மக்கள் அனைவரும் சேர்ந்து தங்களிடமுள்ள ஒட்டு எனும் அதிகாரத்தை, ஆயுதத்தைப் பயன்படுத்தி, அதன் மூலமாக தங்களுக்குத் தேவையான, அடிப்படையான விசயங்களை நாட்டில் உள்ள ஒவ்வொரு தனிநபர்களும் தங்களுக்குத் தேவையானதை தேடிக்கொள்ளவோ, பெற்றுக்கொள்ளவோ முடியாது என்கின்ற காரணத்தால், அரசியலமைப்புச் சட்டம் ஏற்படுத்திக்கொடுத்துள்ள வழிமுறைகளின்படி, அதனை நம்பி, அதை ஏற்றுக்கொண்டு அதன்படியே தங்களுக்கான காரியங்களைச் செய்யும் ஆளை வேலைக்கார(னை)ர்களை தேர்ந்தெடுத்து ஆட்சிக்கட்டிலில் அமரவைத்தால், கட்டில் என்றதும் பள்ளியறை, (படுக்கையறை) "இது நமக்கான உல்லாசத்திற்கான" இடமென்று அம்மணமாக ஆடத் துவங்கிவிடுகிறார்கள். இந்த அயோக்கியர்கள், நன்றிகெட்ட வேலைக்காரர்கள். ஆட்சியில் இருப்பவர்கள், நாம் இந்த மக்களுக்கானவர்கள், இவர்களால், இவர்களுக்காக வேலை செய்ய வந்தவர்கள், மக்களின் அடிமைகள் நாம்! என்பதை எல்லாம் மறந்தோ, அல்லது பதவி அதிகாரம் நம் கையில் உள்ளது. மக்கள்தான் நமக்கு அடிமை. இனிமேல் நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அல்லது நாம் எண்ணுவதுபோல் எல்லாம் இந்த மக்கள் மீது பரிசோதித்துப் பார்ப்போம் மக்களையெல்லாம் வெறும் சோதனைக்கூட எலிகளென நினைத்து இவ்வாறு செயல்படுகிறார்களா? என எண்ணத்தோன்றுகிறது.

இன்றைய நிலை தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பாதிப்புக்குள்ளாகாத மாவட்டமென எதுவுமில்லை. வளர்ச்சித்திட்டங்கள் என்கின்ற பெயரில், இயற்கை வளங்களை அழித்ததும், கொள்ளையடித்ததும்தான் நம்முடைய ஆட்சியாளர்கள் செய்த மிகப்பெரிய சாதனை. இதுமட்டுமல்லாமல் இந்த தமிழ்நாட்டுக்கு தேவையான, மக்கள் விரும்புகிற, அல்லது மக்களுக்கு அத்தியாவசியமான திட்டங்களான நீட் தேர்வில் விலக்கு, கீழடி ஆய்வு தொடர்தல், காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல் போன்றவைகளை மத்திய அரசு



கா.தமிழரசன்

**நாடும், நாட்டு மக்களும் நலமுடன் வாழ வேண்டுமானால் அதற்கு அதிகாரம் மக்களிடம்தான் இருக்க வேண்டும். ஆட்சியாளரிடம் இல்லை! அந்த நிலையில்தான் நாம் இருக்கின்றோமா? இல்லையெனில் அந்த அதிகாரம் நம் கைக்கு எப்போது கிடைக்கும்? அதை நாம் எப்படி? பெறப்போகிறோம்! போராடாமல் எதுவும் கிடைக்காது. "அனைவரும் வீதிக்கு வாருங்கள்" போராட!**

மறுக்கிறது. ஆனால், மக்களுக்கு பேராபத்தினை ஏற்படுத்தும் திட்டங்களான கூடன்குளம் அணுமின் நிலையம், ஸ்டெர்லைட், நியுட்ரினோ ஆய்வு மையம், ஹைட்ரோகார்பன், ஷெல் காஸ், கெயில் எரிவாயு குழாய் அமைப்பது, மீத்தேன் எடுத்தல், மற்றும் கனிம வளங்களைக் கொள்ளையடிக்க, மலைகளை அழித்து, மழையில்லாமல் முல்லைப்பெரியார், பாலாறு, காவிரி என எந்த ஆறுகளிலிருந்தும் தண்ணீர் கிடைக்காமல், "தமிழ்நாடு" பாலைவனமாகி மக்கள் அனைவரும் பஞ்சத்தில் அடிபட்டுச் சாகவேண்டும் இதுவே இன்றைக்கு மத்தியில் ஆளுகின்ற பா.ஜ.க அரசின்! அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்சின் மிகப்பெரும் ஆசை. தமிழ்நாட்டின் உரிமைகள் அனைத்தும் திட்டமிட்டே மறுக்கப்படுகிறது, தடுக்கப்படுகின்றன. இவைகள் அனைத்தையும் புரிந்துக்கொள்ள, இந்தியாவின் பிரதமர் என்கின்ற மோடியின் விருப்பம் மற்றும் ஆணைக்கேற்றவாறு செயல்படும், தமிழ்நாட்டின் இரு முதல்வர்களான ஆளுநர் மற்றும் தலைமைச்செயலாளர் இவர்களின் செயல்பாடுகளைப் பாருங்கள்.

'தமிழ்நாட்டின் முதல்வர்கள்' இபிஎஸ் மற்றும் ஓபிஎஸ் தானே என சொல்லாதீர்கள். அவர்கள் பெயரளவில் மற்றும் பதவிக்காக உள்ளவர்கள். நாம் செயல்படுகிறவர்களின் பெயரைத்தான் சொல்ல வேண்டும். அதுவும் எவ்வாறு யாருக்காக வேலைசெய்கிறார்கள் மக்களுக்காகவா? இல்லையே! இங்கே உரிமைகளுக்காக போராடும் மக்களை அடித்துத் துன்புறுத்துவது, கைது செய்வது, குண்டர் தடுப்புச்சட்டம், தேச பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைப்பது, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றிய நீட் தேர்விலிருந்து விலக்கு பெறும் சட்டத்திற்காக அனுப்பிய கோப்பு என்ன ஆனது? எங்கே இருக்கிறது? இருக்கிறதா? என்ற நிலை, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க தலைமைச்செயலகத்தில் அனைத்துக்கட்சிகளும் சேர்ந்து ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தை, நேரில் சென்று பிரதமரை சந்தித்து அளிக்க, கோரிக்கை வைக்க நேரம் ஒதுக்க மறுத்தது, தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் தரையிலேயே கால் வைக்காமல் ஓடியது, வந்தவர்



இவ்வாறு ஓடும்படியான சூழல் ஏன் உள்ளது, உருவானது, இங்கே மக்கள் ஏன் போராடுகிறார்கள், அதற்கான காரணத்தை உணர்ந்து கொண்டேன், உங்கள் உணர்வுகளை மதிக்கிறேன் உங்களுக்கு நியாயம் கிடைக்கும். "போராட்டத்தைக் கைவிடுங்கள்" என்று போராடும் மக்களுக்கு அதைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட பேசாமல் சென்றது. பிரதமரை நேரில் சந்திக்க சென்ற தமிழ்நாட்டின் முதல்வரை சந்திக்காதது, இவைகளையெல்லாம் பார்க்கும்போது தமிழ்நாடு இந்தியாவின் அண்டைநாடு அல்ல. எதிரிகள் வாழும் நாடு, எதிரிகளுடைய நாடு என்கின்ற எண்ணத்தில் இந்தியாவை ஆளும் ஆட்சியாளர்கள் செயல்படுகிறார்கள் போல் உள்ளது.

நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி இந்த மண்ணையும், மக்களையும் காப்பாற்ற வேண்டி அமைதியான முறையில் போராடினால் அதிகாரத்திலிருக்கின்ற திமிரில் அடக்குமுறையை ஏவிவிடும் அரசுக்கான அதிகாரத்தை அளிப்பது நாங்கள்தான்! என்பதை அமைதியாக, பெரும் புரட்சியாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், மக்களும் ஒன்றுசேர்ந்து வருகின்ற 2019-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணித்தால்! என்ன?

நடக்குமா? இதை அனைத்துக் கட்சிகளும் ஏற்குமா? பின்பற்றுமா? இது சரியா? நடைமுறைக்கு ஒத்துவருமா? தமிழ்நாட்டைத் தனி நாடாக்கப் போகின்றோமா? என பல்வேறு கேள்விகள் எழலாம். விடை ஒன்றுதான். யாருக்கும் (அந்நியரிடம் மட்டும் அல்ல, நமது ஆட்சியாளர்களிடமும்) அடிமையாகாமல், தங்கள் பகுதியிலுள்ள மக்கள், மண்ணோடும், இயற்கை வளங்களோடும், சுத்தமான தண்ணீரையும், காற்றையும் பெற்று சுதந்திரமாய் வாழ்வது. அதை அழிக்க, ஒழிக்க வருபவர்களை எதிர்ப்பது! அது நம்மை ஆள்பவர்களாக இருந்தாலும்.

இதற்கு என்ன செய்வது? "தேர்தலைப் புறக்கணிக்க முடியாது" ஏன்? "தேர்தல் என்பது சனநாயகமுறை" சரி! "வாக்களிப்பது என்பது ஒவ்வொரு வாக்காளரின் கடமை" சரி! "அந்தக்கடமையைச் சரியாக செய்யவேண்டும்" யார்? "வாக்காளர்" சரி வேட்பாளர்கள், அந்த ஓட்டை வாங்கியவர்கள் தங்களுடைய கடமையைச் சரியாக செய்கிறார்களா? அதன் மூலம் பதவிக்கு, அதிகாரத்திற்கு வந்தவர்கள், இந்த நாட்டு மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு மூன்று வேலையும் கிடைக்கிறதா? கல்வி அருகில் வேண்டாம் சற்று தூரத்திலாவது இலவசமாகக் கிடைக்கிறதா? இனி கிடைக்குமா? அதுவும் தன்னுடைய தாய் மொழியில், விரும்பிய மொ(வ)ழியில் படிக்க முடியுமா? பிறகு வேலை கிடைக்குமா? படிப்புக்கேற்ற ஊதியம் வேண்டாம், (அந்தத் தகுதியை யார் எவ்வாறு தீர்மானிப்பது அதை விட்டுவிடுவோம்) குறைந்தபட்ச வாழ்க்கைக்கு உத்திரவாதமான சம்பளம். பிறகு மருத்துவம் இலவசமாகக் கிடைக்குமா? அரசு மருத்துவமனையின் நிலை எவ்வாறு உள்ளது? நம்மை ஆள்பவர்கள் யாராவது அரசு மருத்துவமனையில்

இப்போது வைத்தியம் பார்ப்பார்களா? மக்கள் தான் கொண்ட கருத்தை சுதந்திரமாகப் பேசவும், எழுதவும் முடிகிறதா? விரும்பிய உணவை சாப்பிட முடிகிறதா? இப்படி பட்டியல் நீள்கிறது இவையெல்லாம் நாம் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய அந்த உத்தமர்கள், மக்களுக்கு செய்யும் நல்ல காரியங்கள்.

இந்த நிலையில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிப்போம். இது தேர்தல் (சனநாயகத்தில்) நம்பிக்கையில்லாத மக்கள் மட்டும் புறக்கணிப்பது அல்ல! ஒட்டு மொத்த தமிழ்நாடே அரசியல்வாதிகள் உள்பட புறக்கணிக்க வேண்டும். இவர்கள் அங்கே சென்றுதான் ஒன்றும் ஆகப்போவதில்லையே! பிறகு எதற்கு வெட்டியாக! அவ்வாறு நடந்தால் ஒட்டுமொத்த உலகம் பார்க்கிறதோ? இல்லை இந்தியாவில் உள்ள மற்ற மாநில மக்கள் கவனிப்பார்களா? இல்லையோ? நமது இந்த முடிவு! அதிகாரத்தில் இருப்பவர்களை அமைதியாக இருக்கவிடாது. தேர்தலை நடத்தத் தேவையான அனைத்து வேலைகளையும் செய்வார்கள். ஆனால் நமது இந்த செயல் ஒத்துழையாமைதான். அமைதியாக யார்? என்ன கூப்பாடு போட்டாலும், கெஞ்சினாலும், கதறினாலும், ஒட்டு மொத்த மாநில மக்களும் நமக்கு காது இல்லாதவர்கள் போல் அமைதியாக இருக்க வேண்டும். இப்போது இந்த நாட்டை ஆள்பவர்களே! மக்களின் போராட்டங்களுக்கு, குரலுக்கு செவிகொடுத்து கேட்பதிலையே! அதே நிலையை நாமும் பின்பற்றுவோம். இதுபோன்று செய்தால், மற்ற மாநில மக்களும் யோசிப்பார்கள்.

தமிழ்நாட்டு மக்களை! இந்த போராட்ட நிலைக்கு யார் தள்ளியது? நமது மாநிலத்தின் நிலை என்னவாக உள்ளது? நமக்கு அதுபோன்ற பிரச்சனைகள் எதுவும் இல்லையா? பிறகு நாமும் ஏன் இதுபோன்ற நிலையை பின்பற்றக்கூடாது? எனப் பேச ஆரம்பிப்பார்கள். எந்த மாநில மக்களையும் மதிக்காமல், அவர்களது உரிமைகளை, கொள்ளையர்களைப்போல பறித்து அவர்களிடமுள்ள நிலம், இயற்கை வளம் என அனைத்தையும் பிடுங்கி அடிமைகளைப்போல் நடத்தும் நிலைமாறி, அந்தந்த மாநில மக்கள் விருப்பத்திற்கு மாறாக எந்தத்திட்டதையும் மத்திய அரசு திணிக்கக்கூடாது,

மாநிலத்திற்கென என்னென்ன உரிமைகள் உள்ளதோ அவைகள் அனைத்தும் மைய அரசின் எந்தவிதமான தடையும் இன்றி முழு சுதந்திரத்தோடு செயல்படும் உரிமை. மத்திய அரசுக்கு என்று, தனிப்பட்ட எந்த அதிகாரமும் இல்லை. மத்திய அரசு என்பது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் கூட்டு இசைவுதான். மத்திய அரசு என்பது மாநில அரசுகளின், மக்களின் நலத்தின்மேல் அக்கறை கொண்ட, அதனைக் காப்பாற்றுகிற நிறைவேற்றுகிற அரசுதான். எல்லைப் பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கை, உள்நாட்டு உற்பத்தி, வளர்ச்சி, அறிவியல் கண்டுபிடிப்பு, உணவு, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு என எதைக் கண்டுபிடித்தாலும், உருவாக்கினாலும், அவை அனைத்தும் மொழியால், இனத்தால், பழக்கவழக்கத்தால், பண்பாட்டால் வேறுபட்டு பல மாநிலங்களில் அவை தன் சொந்த பூமி இங்கு நாம் அமைதியாகவும், சுதந்திரமாகவும் தனக்குப் பிடித்த வாழ்க்கையை இந்தியனாக வாழ்பவனை, வாழவைப்பதும் காப்பதும்தான் இந்தியாவை ஆள்கிற மத்திய அரசின் கொள்கையாக இனி இருக்கும். இருக்க முடியும். இருக்கவேண்டும், என மத்திய அரசு அறிவிக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். அதைத் தவிர்த்து மத்தியில் ஆள்பவர்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி எல்லாம் மக்களை ஆட்டுவிக்க நினைக்கக்கூடாது, அது தேவையில்லாதது. ஏனென்றால் ஒட்டுமொத்த மாநிலமும் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்தால், மத்திய அரசும் கிடையாது. பிரதமரும் கிடையாது. மத்தியில் இருப்பவர்கள், வர நினைப்பவர்கள் இதை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது.



தவிர மத்திய அரசுக்கென்று தனிப்பட்ட எந்தவிதமானதொரு விருப்பமும், அதிகாரமும் தேவையில்லாத ஒன்று. இனி மாநிலத்திற்கென உள்ள அதிகாரங்கள், அல்லது உரிமைகள் அனைத்தையும் பிடுங்கி மத்தியிலே குவிக்கும் எண்ணங்களை விட்டு மைய அரசு திருந்த வேண்டும். எப்போதும் பெரியண்ணன் மனநிலையில் உள்ள ஆட்சியாளர்கள்! இனி அதுபோல் யோசிக்கவே கூடாது என்ற இந்த நிலை வருமா? இது நடக்குமா? சத்தியமா? இவைகளைப் பொதுமக்களாகிய உங்களுடைய விருப்பத்திற்கே விட்டுவிடுகிறேன்.

நாடும், நாட்டு மக்களும் நலமுடன் வாழ வேண்டுமானால் அதற்கு அதிகாரம் மக்களிடம்தான் இருக்க வேண்டும். ஆட்சியாளரிடம் இல்லை! அந்த நிலையில்தான் நாம் இருக்கின்றோமா? இல்லையெனில் அந்த அதிகாரம் நம் கைக்கு எப்போது கிடைக்கும்? அதை நாம் எப்படி? பெறப்போகிறோம்! போராடாமல் எதுவும் கிடைக்காது. "அனைவரும் வீதிக்கு வாருங்கள்" போராட! நம் உரிமையைப்பெற! அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு முழுச் சுதந்திரக்காற்றைக் சுவாசிக்க. நாம் நாமாய் வாழ. போராடுவோம்! போராடுவோம்! வெற்றி கிடைக்கும்வரை போராடுவோம். ●

டி.எஸ்.எஸ்.மணி

# பெண் என்றால் மானுடம்





ஒரு கோமாளி நடிகரின், கோமாளித்தனமான செயல் தமிழகப் பெண் ஊடகவியலாளர்களிடம் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள பெண்ணியச்சிந்தனையாளர்களையும், பதவிகளில் இருக்கும் பெண்களையும், பணிகளில் இருக்கும் பெண்களையும் தட்டி எழுப்பியுள்ளது. கோமாளி நடிகர், தான் கோமாளித்தனமாக, திருமலை என்பவரது முகநூலைப் படிக்காமலேயேப் பகிர்ந்தேன் என்று அட்மினைக் காரணமாக்காமல், சரணடைவுச் செய்தாலும், இதை வைத்து, பெண்களை இழிவாக, நான்காம் தரமாக, கேவலமாக, குற்றவாளிகளாகச் சித்தரிக்கும், சீரழிந்த சிந்தனையாளர்களுக்கு, செருப்படி தருகின்ற, தீர்ப்பை, உயர்நீதிமன்ற பெண் நீதிபதி ராமதிலகம் கொடுத்துள்ளார். அதில் சம்பந்தப்பட்ட கோமாளி நடிகரையும், அவரைப்போல எண்ணும் "கோணல் புத்திக்காரர்களையும்" தெருவுக்கு இழுத்து அடித்துள்ளார்.

ஒரு பெண்ணை படுக்கைக்கு அழைத்து, அதையே பணி உயர்வுக்கு நிபந்தனையாக்கி, கேவலமாகச்செயல்படும் "ஆண் அதிகாரிகளோ, ஆண் முதலாளிகளோ, மானுடப்பிறவியே அல்ல என்றும், விலங்கினச் சிந்தனை கொண்டவர்கள்" என்றும் துணிந்து கூற, துப்பில்லாத இந்த உலகில், இரண்டு வாரம் கழித்து, கோமாளி நடிகரின் முன் பிணை மனு மீதுதான், இந்த பெண் நீதிபதி தனது கண்டனத்தைப் பதிவு செய்கிறார். கோமாளி நடிகரின் கூற்றுக்கு எதிராக, கிளர்ச்சி செய்த பெண் ஊடகவியலாளர்களும், ஆண் ஊடகவியலாளர்களும், கல்லெறிந்தார்கள் என வழக்குப்பதிவு செய்த காவல்துறையின் "திசை திருப்பும் திருப்பணி" கோமாளித்தனத்தின் மீதான குற்றத்தை மறைக்க முயன்றாலும், அதன் "கொடூரச் சிந்தனையை" வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் இந்தப்பெண் நீதிபதி.

மேலிடத்து ஆதரவோ, அனுதாபமோ, இருப்பதனாலேயே, "தேடப்படுவதாக" ஊடகத் தர்மங்கள் "திரைப் படம்" காட்டும்போது, தனது வட்டாரத்திலே, பகிரங்கமாகப் பவனி வரும் கோமாளிக்கு, சட்டப்படி "முன் பிணை எடுக்க" ஆதரவுச் சக்திகள் செயல்படும்போது, அதற்கு "சம்மட்டி அடி" அடித்திருக்கிறார் இந்தப் பெண் நீதிபதி.

ஆண் ஆதிக்கச் சக்திகள் அனைவருமே இதேபோலப் பெண்களை இழிவாக "உற்று நோக்கும் போது" அமைதி காக்கும் ஆண்களும், பெண்களுமே, "அநியாயமான இழிசொல் நாயகர்களுக்கு" என்றுமே மறைமுகமாக, "சாமரம்" வீசுகிறார்கள் என்று புரிந்ததால்தான், தன் மேசைக்கு வந்த மனு மீது, தீர்ப்பு கூறும் தருணத்தில், ஆணாதிக்கவாதிகளின் சிந்தனைகளுக்கு, ஒரு சவக்குழி தோண்ட பாதை அமைத்துக் கொடுத்துள்ளார், இந்தப்பெண் நீதிபதி.

"சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் செய்திகள் என்பது, அதன் கருத்துக்களை ஏற்றுக் கொண்டதாகவும், அதை தானும் பரப்புவதாகவுமே பொருள்படும்" என்று தெரியாமல் செய்துவிட்டேன் என மன்னிப்புக் கேட்ட கோமாளிக்கு இந்தப்பெண் நீதிபதி பதில் கொடுத்துள்ளார்.

"படுக்கையைப் பகிர்வது மட்டுமே பெண்கள் வாழ்க்கையில் உயர் பதவிகளுக்கு வருவதற்கு ஒரே வழி என்றால், உயர் பதவிகளில் இருக்கும் அனைத்துப் பெண்களையுமே அது உள்ளடக்குமல்லவா?" என நீதிபதி வினவியுள்ளார். "யாருக்குமே பெண்களை இழிவுபடுத்த உரிமையில்லை. அப்படிச் செய்வார்களானால், அது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல்" என்று இடித்து உரைத்துள்ளார்

மனுதாரரான கோமாளி நடிகர், மன்னிப்புக் கேட்டு விட்டார் என்று கூறப்பட்டதற்கு, "உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திய வடிவத்தில் காட்டுவதே தலைமைக்கான இலக்கணம். பொதுவாழ்வில் இருக்கின்ற மனிதர்களிடமிருந்து, வரும் சொற்கள் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் கொண்டு வர வேண்டும். அவை வெறுப்பையும், பிளவுகளையும் கொண்டு வரக்கூடாது. நாம் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். பிறகு "மன்னிப்பு" எனச் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது." என்று நீதியரசர் கூறியுள்ளார்.

"முகநூல் பக்கத்தைப்படித்துப் பார்க்காமலேயே, பகிர்வு செய்து விட்டேன்" என்ற மனுதாரரின் நியாயப்படுத்தலுக்கு, "தவறுகளும், குற்றங்களும் ஒன்றல்ல. குழந்தைகள்தான் தவறு செய்யும். அதை மன்னித்து விடலாம் அதுவே வயது வந்தவர்களால் செய்யப்படுமானால், அவை குற்றங்களாகத்தான் ஆகிவிடுகின்றன." என்று கூறியுள்ளார்.

"அந்த முகநூல் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள மொழி இழிவுபடுத்துவதாகவும், ஆபாசமாகவும் உள்ளது. மனுதாரர் அளவு பிரபலமும், வயதும் உடைய ஒருவருக்கு ஏற்புடையதல்ல. மனுதாரர் படித்தவர். நிறைய பின்பற்றுபவர்களைக் கொண்டுள்ளார் எனும் போது, இத்தகையச் செயலை, ஏற்க முடியவில்லை. தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழாமல், அவர் ஒரு தவறான முன்னுதாரணத்தைப் பதிவு செய்து விட்டார் என்றும் நீதியரசர் கூறியுள்ளார்.

மேற்கண்ட பெண் நீதியரசரின் சொற்கள், குறிப்பிட்ட அந்த நடிகருக்கு மட்டுமல்ல. நம்மைச்சுற்றி நிலவும் ஆணாதிக்கச் சமுதாயம் முழுமைக்குமே பொருந்தும்.

– தொடரும்



▪ ஜூன் 27 - உலக நீரழிவாளர் தினம்



# நம் உரிமைக்குரல் காவிரி

### இலக்கிய வரலாறுகள்:

காவிரிக்கும் தமிழகத்திற்குமான பன்னெடுங் காலந்தொட்ட வரலாறுகளையெல்லாம் தமிழில் எழுதப்பட்ட கம்பராமாயணம், சிலப்பதிகாரம் பட்டினப்பாலை, நளவெண்பா, தனிப்பாடல் திரட்டு என ஒவ்வொரு இலக்கிய நூல்களாக வாசித்து அதிலே காவேரி குறித்த செய்திகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்டு விட்டனவே என பெருமைகொள்ளலாம். இவ்வளவு ஏன் 1924ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே

*“கங்கை நதிப்புரத்து கோதுமை பண்டம்*
*காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்”*

என்ற முண்டாசுக்கவி பாரதி பாடிய காவிரியின்பெருமை மிக்க பாடல்களையும் மீண்டும் மீண்டும் வாயார பாடிக்கொள்ளலாம். இவையெல்லாம் இன்றும் தமிழ் புலவர்களுக்கும், தமிழ்த்துறை மாணவர்களுக்கும் ஆய்வு பட்டங்கள் வாங்குவதற்கு பயன்படுகிறதே தவிர இலக்கியத்திலுள்ள நமது காவிரி நதிநீர் உரிமையை இப்போதைய இணையதள மோகத்திலுள்ள இளம் தலைமுறையின் கவனத்திற்கோ, நீதிமன்ற கவனத்திற்கோ இவையெல்லாம் ஒரு பொருட்டாகவே இல்லை என்பதே எதார்த்தமான உண்மையாக உள்ளது.

இலக்கிய நூல்களில் சொல்லப்படுபவனற்றுக்காக மட்டும் நாம் காவிரி உரிமையை கோரவில்லை. மாறாக இலக்கியமும், வரலாறுகளும் நம் கடந்தகால உரிமைகளை ஆதாரமாக தெரிவிப்பதினால் நிகழ்கால போராட்டத்தின் தீவிரத்தை இன உணர்வுடன் கொண்டு செல்லுமே என்ற உயரிய நோக்கத்திற்காகவே காவிரி பற்றிய வரலாறுகளையும், இலக்கிய சான்றுகளையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. வரலாறுகளை அறிந்தவர்களாலேயே வரலாறு படைக்கும் வண்ணமாக நிகழ்காலத்தில் வாழ முடியும் என்பது உண்மையே.

### காவிரி அரசியல்

மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளெல்லாம் அரசியலாகிவிட்டால் தெருவில் நிற்பது மக்கள் தான். அரசியலுக்கு அப்பாற்பட்ட உரிமை முழக்கம் மட்டுமே மக்களுக்கான வாழ்வாதாரத்தை பெற்றுத்தரும் என்பது காவிரிக்கு முற்றாகப் பொருந்தும் தீர்வு.

ஈழம்பற்றி பேசினாலும், காவிரி பற்றி பேசினாலும் எப்போதும் எதனையும் திராவிட கட்சிகளினாலேயே இந்த நிலைமை என அடி நாதம் தெரியாத சிலர் பேசுவதை அன்றாடம் தேனீர் கடை தொடங்கி தொலைக்காட்சி விவாதம் வரை காணலாம். இதுபோன்ற நபர்களிடம் திராவிட கட்சிகள் என்ன செய்துவிட்டதற்காக இந்த குறைபாட்டு பாடுகிறீர்கள், என கேட்டால் அதற்கும் விடை கிடையாது. காரணம் இவர்கள் எதையுமே முழுதாக அறியாதவர்கள். இங்கே திராவிட கட்சிகள் என்றால் பெயரில் மட்டுமே திராவிடத்தை சூட்டியுள்ள எல்லோருமல்ல என்பதை குறித்துக்கொள்ளவும். காவிரி பிரச்சனைக்கு உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்திருந்த நிலையில் 1971-இல் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரால் பலமுறை கடிதம் மூலமாக காவிரி பிரச்சனையை தான் தீர்ப்பதாக நம்பிக்கையுறுதி அளிக்கப்பட்டும், நேரடி சந்திப்புகள் மற்றும் அனைத்துக்கட்சிக் கூட்டத்தின் முடிவு என அத்தனைக்கும் பிறகும் மன்னை நாராயணசாமி, முரசொலிமாறன் உள்ளிட்டோரின் தனிப்பட்ட காவிரி தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருக்க தமிழக அரசு மட்டும் மீண்டும் வழக்கு தொடுக்கும் உரிமையோடு வழக்கைத் திரும்பப் பெற்ற நிகழ்வை பற்றியெல்லாம் முழுவதுமாக தெரியாமல் அதிகாரத்திலுள்ளவர்களே பொறுப்பற்ற முறையிலும், தரமற்ற வார்த்தைகளை பிரயோகம் செய்து, காவிரியை அரசியல் நோக்கோடு

தெ.ரெங்கராசன் என்கிற திராவிடராசன்

தமிழகத்திலுள்ள 16 மாவட்டங்கள் நேரடியாக காவிரி நீர் பாசன பகுதியாகவும், எஞ்சியுள்ள மாவட்டங்கள் குடிநீருக்காகவும், பிற தேவைகளுக்காகவும் நம்பியிருக்கும் காவிரி நதிநீர் மீதான நம் மாநில உரிமையை எவ்வித சார்புகளுமின்றி ஒருங்கிணைந்து ஒருமித்தக் குரலாக ஒலித்தால் மட்டுமே கேட்காத காதுகளும், மிரண்டுபோய் செவிசாய்க்கும்.

பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. இவர்கள் எல்லோரும் பிறரைக் குறைசொல்லி காவிரி பிரச்சனையை அரசியலாக்கி சுயலாபம் தேடுகிறார்கள் என்பதைத் தமிழக மக்கள் அறிவர்.

## இன உரிமைக்கான குரல்

ஆறுகள் தோன்றுமிடங்களைவிடவும் அவை பாய்ந்தோடுகின்ற நிலப்பரப்பு பகுதிவாழ் மக்களுக்கே அவற்றின் மீதான உரிமை கூடுதலாக உள்ளது. ஏனெனில் அதிக வெள்ளப்பெருக்கினால் கூடுதலான பாதிப்புகளை சந்திக்கின்ற மக்கள் ஆறு பாய்ந்தோடுகின்ற பகுதி மக்களாகத்தான் இருக்கிறார்கள். இந்த நியதி உலக நாடுகள் அனைத்திற்கும் பொருந்துகிறது. காவிரியின் மொத்த நீளமான 760 கி.மீ தூரத்தில் ஏறத்தாழ 65% சதவீத நீளம் தமிழகத்தில் தான் அமைந்துள்ளது. 35% சதவீத நீளம் கொண்ட கர்நாடக மாநிலத்திற்கும் அங்குள்ள மாண்டியா, ஹாசன் போன்ற பகுதிகளுக்கும் இருக்கும் காவிரி உரிமையை விட கூடுதலான உரிமை தமிழகத்திற்கும், தமிழக விவசாயிகளுக்கும் உண்டு.

காவிரி டெல்டா மாவட்டங்களையும் சேர்த்து தமிழகத்தில் 16 மாவட்டங்கள் காவிரி நதிநீரோடு தொடர்புடையவையாக இருக்கின்றன. காவிரியை விட கூடுதலான நீரை அளிக்கக்கூடிய கிருஷ்ணா நதிநீர் 734 ஆ.மி.க நீர் அரபிக்கடலில் கலக்க காரணமாக உள்ள கர்நாடகம் தமிழகத்திற்கு மட்டும் ஒரு சொட்டு தண்ணீர் கூட தரமாட்டோம் என அரசியல் பேதமின்றி ஒருமித்து





கூச்சலிடுகிறது. ஆனால் இங்குள்ள இன உணர்வோ எழுச்சியின்றி உறக்க நிலையில் இருக்கிறது. சூதாட்டக் களமான மட்டைப்பந்து களத்திற்குக் கூடுகின்ற பேரார்வம், பொழுது போக்கிற்காக இன உணர்வைத் தள்ளி வைத்துவிடுகிறது. தன்மானத்தை கொடுத்தேனும் இனமானம் காக்க வேண்டும் என்ற புரிதல் ஏற்பாட்டாலொழிய இன உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்காது என்பதை எல்லோரும் உணரும் காலம் எப்போது?

## நீதியின் தாமதம்

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பாகும். இக்கூற்று காவிரிக்கு முற்றாகப் பொருந்தும். ஒற்றைச் சொல்லுக்கு விளக்கம் கேட்க ஆறு வார காலம், பின்னர் மீண்டும் ஒத்திவைப்பு என அடுக்கடுக்கான ஒத்தி வைப்புகளும் காலதாமதமும் தேர்தல் காரணமும் என கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட வழக்கு இப்படி காலதாமதம் செய்யப்படுகிறதே தவிர உடனடி நடவடிக்கை என்ற பேச்சிற்கே இடமில்லை வெறும் ஏட்டளவிலேயே 205 ஆயிரம் மில்லி கன அடி நீர் 192 ஆயிரம் மில்லி கன அடி நீராகக் குறைந்து, பின்னர் மீண்டும் 192 ஆயிரம் மில்லி கன அடி நீர் 177.25 ஆயிரம் மில்லி கன அடி நீராகச் சுருங்கிக் கொண்டே வருகிறது. காவிரி டெல்டா விவசாயிகள் விதைத்த பயிர்கள் கண்முன்னே கருகியது கண்டும், கால்நடைகள் மேய்ச்சல் நிலமற்று எலும்பும், தோலுமாய் மடிந்ததும் இதையெல்லாம் காணப்பொறுக்காத விவசாயி தன்னைத்தானே மாய்த்துக்கொண்டதும் சரிவர பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் ஆவணப்படுத்தப்படாத காரணத்தினாலேயே தான் நீதி அரசர்கள் பெங்களூரு நகர சொகுசு வாழ்விற்காக தமிழகத்திற்கு உரித்தான பங்கீட்டு நீரை அவர்களுக்குத் தாரைவார்த்துள்ளனர். ஏறத்தாழ 3 லட்சம் ஏக்கர் விவசாய தேவைக்கான நீரை இழந்துவிட்டோம். மீதமுள்ள நீரோ ஏட்டளவில் மட்டும் எப்போது வரும் என்ற உத்தரவாதமே இல்லாமல் காத்திருக்கிறது. நீதிமன்றம் எத்தனை கடுமையான உத்தரவு பிறப்பித்தாலும் தமிழகத்திற்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட தரமாட்டோம் என உறுதியாக நிற்கும் கர்நாடகத்தின் நீதிமன்ற அவமதிப்பு செயல்பாடு மட்டும் நீதியின் பார்வைக்கு படுவதே இல்லை. அமைதியே உருவாகக் கொண்ட தமிழக விவசாயிகள் டெல்லியின் வீதிகளில் அம்மணமாகவும் நின்றுவிட்டனர். ஆனால் நிலைமை மட்டும் மாறிவிடவில்லை.

## அடுத்தக்கட்ட நகர்வு

தமிழகத்திலுள்ள 16 மாவட்டங்கள் நேரடியாக காவிரி நீர் பாசனப் பகுதியாகவும், எஞ்சியுள்ள மாவட்டங்கள் குடிநீருக்காகவும், பிற தேவைகளுக்காகவும் நம்பியிருக்கும் காவிரி நதிநீர் மீதான நம் மாநில உரிமையை எவ்வித சார்புகளுமின்றி ஒருங்கிணைந்து ஒருமித்தக் குரலாக ஒலித்தால் மட்டுமே கேட்காத காதுகளும், மிரண்டுபோய் செவிசாய்க்கும்.

*"நடந்தாய் வாழி காவேரி"* ●

# தமிழர் விளையாட்டுகள்


# தாயம்

தொழில் நுட்ப வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கும் இந்த காலத்தில் மனிதர்கள் சக மனிதர்களோடு விளையாடும் சூழல் மாறி மனிதர்களும் குழந்தைகளும் இயந்திரங்களோடு விளையாடி இயந்திரமாகவே மாறிவரும் நேரத்தில் நம் பழமையான விளையாட்டான தாயம் விளையாட்டைப்பற்றி தெரிந்துகொள்வோம். மகாபாரதக்கதை கேள்விப்பட்டிருக்கும் அனைவருக்கும் தாயம் என்ற விளையாட்டு ஒன்றும் புதிதில்லை. மகாபாரதத்தில் தருமன், பாண்டவர்களின் நாட்டையும், பாஞ்சாலியையும் பணையமாக்கிய சகுனியின் வஞ்சக விளையாட்டாக அல்லது சூது விளையாட்டாக அறிந்த ஒன்றே. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் விளையாட்டாக ஆரம்பித்த தாயம் என்னும் விளையாட்டு பின்நாளில் மிகப்பெரிய போருக்கு மூலமாக இருந்தது என்பதையும் மகாபாரதம் தெரிந்த எல்லோரும் அறிந்திருப்பீர்கள். தாயம் எனும் விளையாட்டை மகாபாரதத்தில் பாண்டவ மன்னர்கள் நாட்டையும், பாஞ்சாலியையும் இழக்கக் காரணமான விளையாட்டு என்று பார்ப்பதுபோல் துரியோதனன் -சகுனியின் பக்கம் நாட்டையும் பாஞ்சாலியையும் பெறுவதற்குக் காரணமான விளையாட்டாக இருந்திருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இது மிகவும் பழமையான விளையாட்டு என்பதால் அது எப்போது யாரால் எங்கு தோன்றியது என்கிற ஆராய்ச்சிக் கேள்விக்கு இன்னும் பதில் காண முடியாமலேயே உள்ளது. இது நாட்டையும் மனைவியையும் வைத்து விளையாடும் அளவிற்கு உள்ள அரசர்களுக்கு மட்டுமோ அல்லது பணக்காரர்களுக்கு மட்டுமோ உரிய விளையாட்டு என்று சாதாரண மக்கள் ஒதுங்கவேண்டாம். பணையம் வைக்காமல் விளையாடினால் இது சாதாரண மனிதர்களும் விளையாடும் விளையாட்டுதான். அதை எப்படி விளையாடுவது என்று பார்ப்போம்.

தாயம் விளையாட்டைக் கடுமையான மழைக் காலங்களிலோ அல்லது கடுமையான வெயில் காலங்களிலோ பொழுது போக்கிற்காக விளையாடும் உள்விளையாட்டாகும். பெரும்பாலும் பெண்களே விளையாடுவார்கள். பிறகு பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்கள் என அனைவரும் சேர்ந்து விளையாடுகின்ற விளையாட்டாகப் பரிணமித்தது.

தாயம் விளையாட விளையாட்டுக் களம் என்று நாம் எதுவும் பெரிதாக கட்டமைப்பு வசதிகள் எதுவும் வடிவமைக்கத் தேவையில்லை. வீட்டின் தரையில் கட்டம் வரைந்து மரம் அல்லது செம்பினால் ஆன நான்கு முகம் கொண்ட தாயக்கட்டையை தரையில் உருட்டி அதில் விழும் புள்ளிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு காய்களை தாயக்கட்டத்தில் நகர்த்தி விளையாடலாம். தற்பொழுது ஆறுமுகம் கொண்ட தாயக்கட்டைகளும் குழந்தைகள் ஆடுவதற்கான கட்டங்களும் கடைகளில் விற்கப்படுகின்றன. ஒரு சில பகுதிகளில் தாயக்கட்டைக்கு பதில் புளியங்கொட்டைகளை உருட்டியும் விளையாடுகின்றனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு விதமான கட்டங்கள் அமைத்து விளையாடினாலும், தமிழர்களைப் பொறுத்தவரையில் இரண்டு வகையான கட்டங்களை அமைத்து விளையாடுகின்றனர். அதில் ஒரு வகை தாயக் கட்டத்தில் காய்களை உட்புறமாக ஒரு சதுரத்தில் வைத்து அதன் வெளிப்புறமாக நான்கு பக்கமும் *6 x 3* கட்டங்கள்





அமைக்கப்பட்டிருக்கும். அதன் மற்றொரு வகை தாயக் கட்டத்தில் 7 x 7 சதுரமாக அமைக்கப்பட்டிருக்கும். சோழி, சொக்கட்டான், பாம்பு ஏணி போன்ற விளையாட்டுகளும் இந்த தாயம் விளையாட்டின் வகைகளேயாகும்.

நான்முக தாயக்கட்டையை கொண்டு 3x6 கட்டத்தில் எப்படி தாயம் விளையாடுவது என்று பார்ப்போம்.

இரண்டு முதல் நான்கு பேர்வரை தாயம் விளையாடலாம். நான்கு பக்கமும் நாலு பேர் அமர்ந்து விளையாடலாம். எதிரெதிரே இருப்பவர்கள் கூட்டாகவோ தனியாகவோ விளையாடலாம். கூட்டுச் சேர்ந்து விளையாடுவதைக் கன்னை கட்டுதல் என்று சொல்லப்படும்.ஒவ்வொரு ஆட்டக் குழுவும் இருவேறுபட்ட (கற்கள், புளியங்கொட்டை) ஆறு காய்களைக் கட்டத்தின் மையப்பகுதியான மனைப் பகுதியில் வைத்து ஆட்டத்தைத் துவக்க வேண்டும்.

தாயக் கட்டையை உருட்டி தாயம் விழுந்தபின்தான் மனையிலிருந்து காய்களை நடுவில் உள்ள முதற்கட்டத்தில் இறக்க வேண்டும். தாயம் என்பது ஒரு கட்டையில் ஒரு புள்ளியும் மறு தாயக்கட்டையில் பூஜ்ஜியமும் விழுவதாகும். தாயம் விழும் வரை 5, 6, மற்றும் 12 ஆகிய எண்கள் விழுந்தால் தாயக்கட்டையை உருட்டி மறுபடியும் விளையாடலாம். தாயக்கட்டையை உருட்டும் போது 2, 3, மற்றும் 4-ஆகிய புள்ளிகள் விழுந்தால் உருட்டியவர் மறுபடியும் ஆடக்கூடாது. ஒரு ஆட்டத்தில் முதல் காயை மனையில் இருந்து இறக்குவதற்கான தாயம் விழும் முன் விழுந்த அனைத்து மறு ஆட்டப் புள்ளிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

ஒரு கட்டத்தில் ஒரு ஆட்டக்காரரின் காய்களே இருக்க வேண்டும். வேறு ஆட்டக்காரரின் காய்கள் அதே கட்டத்தில் நுழைந்தால் முதலில் அங்கிருந்த காய்களை வெட்டி மனையில் வைக்கப்படும். மீண்டும் தாயம் போட்டுதான் அந்தக் காயை மனையிலிருந்து கட்டத்திற்குள் இறக்க வேண்டும். தாயக்கட்டங்களில் சில கட்டங்களில் மட்டும் குறுக்கே இரு கோடுகள்(x) போடப்பட்டிருக்கும் அதுக்கு 'மலை'னு பேர். இந்த கட்டத்தில் காய்கள் வந்து நிற்பதற்கு மலையேறுதல் என்று பெயர். இந்த கட்டத்தில் ஒரு ஆட்டக்காரரின் காயை இன்னொரு ஆட்டக்காரரால் வெட்ட முடியாது. தாயக் கட்டையை உருட்டும்போது 1, 5, 6, அல்லது 12 ஆகிய புள்ளிகள் விழுந்தால் அவர்கள் மறுபடியும் ஆடலாம். பிறர் காய்களை வெட்டலாம்.

ஒரு ஆட்டக்காரரின் காய்கள் ஒரு முறை அனைத்து கட்டங்களையும் சுற்றி நடுவில் அடுத்த ஆட்டக்காரரின் காய்களையும் வெட்டி வந்த பின் திரும்பவும் மனைக்குள் செல்லும் காய்களை பழம் என்பார்கள். எதிர் ஆட்டக்காரரின் காய்களை வெட்டவில்லையென்றால் மனைக்குள் செல்ல முடியாது. அவ்விதம் மனைக்குள் செல்ல முடியாத காய்கள் கடைசிக் கட்டத்திலேயே தங்கி விடும். சிலர் வேண்டுமென்றே சில காய்களை வெட்டுக்கு விட்டுக் கொடுத்து மறுபடியும் சுற்றி வரவைப்பதும் உண்டு.

காய்கள் மனைப் பகுதியில் இருந்து எல்லாக் கட்டத்தையும் சுற்றி பின் மீண்டும் மனைக்குள் புகுந்த காய்களை ஆட்டத்தில் இருந்து எடுத்துவிடுவார்கள், அதற்கு பழம் எடுத்தல் என்று பெயர். முதலில் எந்த ஆட்டக்காரர் தனது ஆறு காய்களையும் பழமாக மாற்றுகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்களாவர்.



நான்கு பேர் கொண்ட ஆட்டத்தில், எதிரெதிரே அமர்ந்திருப்பவர்கள் ஓரணியாகச் சேர்ந்து, ஈரணியாக ஆடும் போது ஆட்டம் விறுவிறுப்பாகவும் வேகமாகவும் முடியும்.

இந்த விளையாட்டைச் சோழிகளை உருட்டியும் ஆறுமுக தாயக்கட்டையை உருட்டியும் புளியங்கொட்டையை உருட்டியும் சிலர் விளையாடுவதுண்டு.

இந்தத் தாய விளையாட்டு அப்படி என்ன நமக்கு நன்மை பயக்கிறது அதை ஏன் அடுத்த தலைமுறைக்கு நாம் சொல்லித்தரவேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

இந்தத் தாயம் விளையாட்டு அற்புதமாகக் கணிதத்தைக் கிராமப்புற பெண்களுக்கு சொல்லித்தருகிறது. தாயத்தில் காய்களை நகர்த்த தேவையான அறிவுத் திறனும் எதிரியின் காய்களை வெட்டுவதற்கான சிந்தனைத் திறனையும் வளர்க்கிறது. தாய விளையாட்டு போரில் வீரர்களை எவ்வாறு வழிநடத்துவது என்கிற யுக்தியை அழகாகச் சொல்லிக் கொடுப்பதில் தாயத்திற்கு நிகர் தாயமே. இதை சதுரங்க ஆட்டத் தின் முன்னோடி எனலாம்.

இந்த விளையாட்டு தனிமனித வாழ்வில் வாழ்க்கையின் எதார்த்தத்தை சொல்லிக்கொடுக்கிறது. மனிதனாக தோன்றிய எவனும் வாழ்வின் எல்லாக் கட்டங்களையும் கடந்து முன்னேறினால் தான் பழம் என்னும் உயர்ந்த நிலையை அடைய முடியும். வாழ்வின் சில கட்டங்கள்தான் மலையின் மேல் இருப்பது போன்று பாதுகாப்பானது மற்ற கட்டங்களில் எல்லாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், அடுத்தவரால் எந்த நேரமும் வெட்டப் படலாம் அல்லது வேட்டையாடப்படலாம். எப்போதும் ஆறுபோல் முன்னோக்கியே நகரவேண்டும் என்பதை காய்களின் முன்னோக்கிய நகர்வு நமக்கு உணர்த்துகிறது. வாழ்வின் எந்த ஒரு கட்டத்தில் நாம் வீழ்த்தப்பட்டாலும் மன உறுதியோடு மீண்டும் முதலில் இருந்து கவனமாக நம் பயணத்தைத் தொடங்கினால் நிச்சயம் வாழ்வில் பழம் என்னும் வெற்றி நிலையை அடையலாம். இந்த ஆட்டத்தில் ஏதோ ஒரு காயை பழமாக்குவதல்ல வெற்றி, எல்லாக் காய்களையும் பழமாக்குவதே வெற்றி என்கிறது தாயம் என்னும் விளையாட்டு. இதன் பொருள் என்னவென்றால் மனிதனின் வாழ்வில் ஏதோ ஒன்று மிகுந்து இருப்பதல்ல வெற்றி எல்லா நல்ல பண்புகளின் மிகுதிதான் வெற்றி என்கிற வாழ்க்கைப் பாடத்தை இதைவிட யார் நமக்கு சொல்லிக் கொடுக்க முடியும்.

எனவே பெற்றோர்களே உங்கள் குழந்தைகள் எல்லாம் வெறும் படிப்பில் அதிக மதிப்பெண்கள் பெறுவது மட்டும் வெற்றியல்ல எல்லா நல்ல பண்புகளையும் பெறுவது தான் வெற்றி என்று சொல்லும் தாயம் விளையாட்டை உங்கள் குழந்தைகளுக்கு கோடை விடுமுறையிலேயே சொல்லிக்கொடுங்கள். அவர்களும் வாழ்வில் அனைத்து பண்புகளையும் பெற்று வெற்றி வாகை சூடட்டும்.

**– இன்னும் விளையாடலாம்**



■ தடைகள் இருக்கும் சந்தேகப் படுவார்கள் தவறுகள் நிகழும் ஆனால் கடின உழைப்பு இருந்தால் வெற்றிக்கு எல்லை இல்லை. - மைக்கேல் பெல்ப்ஸ்



# அறிந்து கொள்வோம்: PCOS

**PCOS** *(Poly Cystic Ovary Syndrome)* என்ற பல கட்டிகளுள்ள சூலகங்கள் நோய். கடந்த பத்து வருடங்களில் *PCOS* என்பது மிகவும் சாதாரணமாகப் பேச்சுவாக்கில் விழும் சொல்லாகிவிட்டதை நீங்கள் உணர்ந்திருக்கலாம், குறிப்பாக வளர் இளம் பெண் பிள்ளைகளைப் பெற்ற அம்மாக்கள் மத்தியில். *PCOS* என்றால் என்ன என்று கேட்டால், இது உடலில் உருவாகும் ஒருவித நிலை. இந்நிலை உருவாகுமாயின், பெண்களுக்கு ஒழுங்கற்ற மாதவிடாய் ஏற்படும், தோலின் எண்ணைப்பிசுபிசுப்பு அதிகமாகி பருக்கள் பெருக வாய்ப்பு ஏற்படும், முக்கியமாக தலைமுடி கொட்டும் பிரச்சனையும் முகத்தில் மயிர் வளரும் பிரச்சனையும் ஏற்படும். மேற்கூறியவற்றோடு, இந்நிலைமை உருவானால், கருத்தரிப்பது சிக்கலாகும். பெண்களின் மத்தியில் சுமார் 5 முதல் 8 சதவிகிதம் பேருக்கு இந்நிலை இருப்பதாய் சொல்லப்படுகின்றது. பொதுவாய் *PCOS* நிலை உள்ள பெண்கள், உடல் எடைப் அதிகப்படுதலாலோ அல்லது உடல் பருமனாலோ பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

*PCOS* நிலையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு *Ovary* என்ற சூலகம் ஒழுங்காய் இயங்காமல், டெஸ்டோஸ்டெரோன் என்ற ஹார்மோனை அதிகம் சுரக்கும். டெஸ்டோஸ்டெரோன் என்ற ஹார்மோன் பொதுவாக நாம் ஆண்களுடன் சம்பந்தப்படுத்திக் கேள்விப்பட்டிருந்தாலும் இந்த ஹார்மோன் பெண்கள் உடலிலும் சிறிதளவு சுரக்கும் என்பதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். *PCOS* பொழுது, இந்த வழக்கத்தினை விட இன்னும் அதிகமாகச் சுரக்கும்.

சூலகங்கள், முட்டைகளைக் கொண்டிருக்கும் மிகவும் சிறிய திரவம் நிரப்பப்பட்ட பைகளை உற்பத்தி செய்கிறது. இந்தப் பைகள் தான் நுண்ணறைகள் அல்லது திரவப்பை *(follicle)* . ஒவ்வொரு மாதமும் பெண்களின் சுழற்சி சமயத்தில், ஒரு முட்டையைக் கொண்டிருக்கும் முதிர்ச்சியடைந்த ஒரு திரவப்பை உடைந்து முட்டை வெளியேறும். இந்த நிகழ்விற்கு முட்டை வெளிப்படுதல் *(Ovulation)* என்று பெயர்.

*PCOS* உள்ள பெண்களில், மூளை, முட்டைகளை முதிர்ச்சியடையச் செய்து, விடுவிக்கும்படி ஒரு சுரப்பு நீர்ச் செய்தியை சூலகங்கள் அனுப்பாது. இதனால், முட்டை வெளிப்படுதலானது *(ovulation)* சில வேளைகளில் மாத்திரம் நடைபெறும் அல்லது நடைபெறாது. வெடிப்பதற்குப் பதிலாக முட்டைகள் சூலகங்களுக்குள்ளே சிறு சிறு திரவப் பைகளாக வளரும். ஹார்மோன் அளவுகளும் சமநிலை மாறிவிடும்.

*PCOS* உள்ள பெண்கள்,

- வருடத்திற்கு 8-ற்கும் குறைவான மாதவிடாய் சுழற்சியினைக் எதிர்நோக்குவார்கள்.
- ஆண்களுக்கு மாத்திரம் அடர்த்தியான மயிர் வளரும் இடங்களான மேல்உதட்டிற்கு மேல், தாடை, நெஞ்சுப் பகுதி, வயிற்றுப் பகுதியில் மயிர் வளர்ச்சியினைக் காண்பார்கள்.
- உடல் எடை வெகுவாக உயர்ந்து உடற்பருமனால் பாதிக்கப்படுவார்கள்.
- ஆண்கள் எதிர்நோக்கும் தலை வழுக்கை பிரச்சனையை எதிர்நோக்குவார்கள்.
- பருக்கள் பல்கிப்பெருகும்.
- மருத்துவ உதவி இல்லாமல் கருத்தரிப்பதில் பிரச்சனையினை எதிர்நோக்குவார்கள்.

அதோடு, *PCOS* உள்ள பெண்கள் பிற வகையான உடல் உபாதைகளால் பாதிக்கப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

அவை,

- இரத்தத்தில் அதிக அளவு சர்க்கரை (நீரிழிவு நோய்)
- இரத்தத்தில் அதிக அளவு கொழுப்பு

மருத்துவர் **யாழினி**



- *Sleep Apnea* என்னும் தூக்கத்தின் பொழுது மூச்சுத்திணறல்

*PCOS* நிலை உள்ள பெண்களுக்கு இதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பின் வழி அவை தீவிரமாவதற்கு முன் கண்டறிந்து அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

ஆக, *PCOS* இனை கண்டறிவதற்கு ஏதாவது குறிப்பிட்ட பரிசோதனை இருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்பதே பதில். மருத்துவர் உங்களது மாதவிடாய் சுழற்சி பற்றியும் தோல் மற்றும் முடி வளர்தல் பற்றியும் விசாரித்து, பின் உடல் எடை பற்றி கேட்டு அறிந்து அதன் பின் உங்கள் மருத்துவ வரலாற்றினை நோக்கி, அதனை ஆதாரமாய்க் கொண்டு உங்களுக்கு *PCOS* நிலை இருக்கிறதா இல்லையா என்று முடிவு செய்வார்.

தேவைப்பட்டால், இரத்த மாதிரி எடுத்து, ஹார்மோன் அளவுகளையும், சர்க்கரை அளவுகளையும் கணக்கிடுவர். அதோடு, திரவப்பைகளைக் கண்டறிவதற்காக சூலகங்களை *(Ovaries)* ஐ அல்ட்ராசவுண்ட் ஸ்கானும் செய்யக்கூடும்.

சரி. *PCOS* நிலையில் இருந்து மீள்வதற்கு சிகிச்சை ஏதாவது இருக்கின்றதா என்றால், இல்லை. சமாளிப்பதற்குத் தான் சிகிச்சைகள் இருக்கின்றன.

கருத்தரிக்காமல் இருப்பதற்கு *PCOS* ஒரு முக்கிய காரணம் என்று முன்னமே கூறியிருந்தேன். ஆகவே, அதிக உடல் எடையாலும் உடற் பருமனாலும் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், சத்தான ஆகாரம் வழியேவும், *fast food* மற்றும் *sweetened beverages* உட்கொள்வதை கட்டுப்படுத்தியோ அல்லது முற்றாய் தவிர்த்தோ தேவையற்ற உடல் எடையினைக் குறைக்கலாம். அப்படிச் செய்தாலே மாதவிடாய் சுழற்சிகள் சரியாகி, கருத்தரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகப்படும். நீங்கள், உடல் எடையினைக் குறைத்தும் சுழற்சிகளில் பிரச்சனை இருந்தால், நீங்கள் மருத்துவரை அணுகுதல் வேண்டும். மருத்துவ உதவியின் வழியேவும் அவரின் ஆலோசனையும் தான் கருத்தரிப்பதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும். *PCOS* நிலை உள்ள பெண்கள் கருத்தரிக்க விரும்பினால் அவர்களுக்கு சொல்லப்படும் முதல் ஆலோசனை உடல் எடையைக் குறைத்தல் குறித்து தான். மருத்துவ ஆலோசனை படி, முறையாக எடையினைக் குறைப்பது தான் என்றும் நல்லது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

*PCOS* என்ற இந்த நிலையினை நாம் முற்றாய் மாற்ற முடியாது என்ற போதிலும் முறையான மருத்துவ உதவியினாலும் *lifestyle changes* என்ற அன்றாட வாழ்க்கையில் நம் ஆரோக்கியத்திற்காக சிற்சில மாற்றங்களை செய்வதன் வழியேவும் நாம் ஆரோக்கியமான வாழ்க்கையினை வாழ முடியும், *PCOS* உடன் தொடர்புடைய நீரிழிவு மற்றும் இதய நோய்களில் இருந்து நம்மை நாமே காத்துக்கொள்ள முடியும் என்பதையும் இந்த நேரத்தில் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ●

# சாதிக்குப் பிறந்தவர்கள் அல்ல சாதிக்கப் பிறந்தவர்கள்



மாற்றத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் இவ்வுலகில் சாதிகளையும் சமயங்களையும் கண்டறிய நேரம் ஏது?

இப்படியாக ஒரு சாரார் சாதிகளை ஒழிப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கையில் மறுபுறம் சாதியத்துவம் தலைவிரித்து ஆடிக்கொண்டு தான் இருக்கிறது.அடுத்த தலைமுறையினரான மாணவர்களே இதனைத் தகர்த்தெறிவார்கள் என்ற நம்பிக்கை பலரின் மனதிலும் உண்டு. ஆனால், தங்கும் விடுதிகளிலும், படிக்கும் இடங்களிலும் சாதியினால் பகுத்துப் பார்க்கப்படுவதை யார் அறிவார்? மேலும் கிராமப்புறங்களில் தங்கள் வீட்டிற்கு வேலை புரிய வரும் பெரியவர்களை அவர்களின் பெயரைக்கொண்டோ, தொழிலைக்குறித்தோ அழைக்கும் வழக்கத்தை யார் மாற்றுவார்?

வெளியுலகிற்கும், சமூக வளைதலங்களுக்கும் நல்லவர் வேடமிட்ட பலரும் தங்கள் இல்லங்களிலும், வேலையிடங்களிலும் சாதியத்துவத்தை கடைப்பிடிப்பது ஏன்?

தன் பெயரின் பின்னால் தன் படிப்புத் தகுதியை இணைத்த காலம் போய், தன் சாதியை இணைக்கும் காலம் வந்துவிட்டது.

அன்று பெரியார் கூறினார் "“நரக வாழ்வாயிருந்தாலும் அங்கு நான் மனிதனாக மதிக்கப்படுவேனாகில் அவ்வாழ்வே இப்பூலோக வாழ்வைவிட மேலென்று கருதுவேன். நரகவாழ்வு மட்டுமல்ல; அதைவிடப் பலகொடிய கஷ்டங்களை அனுபவிக்க நேரும் இடமானாலும் அவ்விடத்தில் நான் மனிதனாக மதிக்கப் பெறுவேன் என்றால் அவ்வாழ்வே இவ்விழிச்சாதி வாழ்வை விட சுகமான வாழ்வு என்று கருதுவேன்”என்று.இன்றோ நரகத்தில் வாழ்ந்தாலும் என் சாதியின் பெயரோடு வாழ விழைகிறேன் என்கின்ற மக்கள் அலாதி.

இப்படியாகச் சாதியையும், சமயத்தையும் வளர்த்து வரும் மக்களின் மத்தியில், தங்களின் பெற்றோரின் பெயரைத் தன் பெயரின் பின்னால் இணைத்துப் பெருமை கொள்ளும் மக்களைக் கண்டு பூரிக்கிறேன். முற்போக்கான வாழ்வின் மூலதனம் அவர்களே என நம்புகிறேன். நாம் அனைவரும் “சாதிக்குப் பிறந்தவர்கள் அல்ல, சாதிக்கப் பிறந்தவர்கள்”.



**–வர்ஷினி செல்வராஜ்**



▪ வாழ்க்கை எனும் ஓட்டப்பந்தயத்தில் நம்பிக்கையில்லையெனில், நீ நிச்சயம் தோற்றுப் போவாய் - தெரியாதவர்

# மாட்டிறைச்சியும் மனிதக்கொலையும்!

நாம் இதுவரை பார்த்த இலக்கிய, வேத, புராண ஆதாரங்களின் மூலம் நமக்குக் கிடைக்கும் செய்திகள் சொல்வதென்ன?

(1) இந்தியத்துணைக்கண்டத்தின், அனைத்துப்பகுதியிலும் ஆடுகளும், மாடுகளும், பறவைகளும், மீன்களும் மனிதர்களின் உணவாக இருந்தன. அவற்றில் எந்த விலங்கும் விலக்கப்படவில்லை.

(2) சிந்து சமவெளிப் பகுதிகளுக்குள், ஆரியர் ஊடுருவலுக்குப் பின் ஏற்பட்ட வேதங்களில் மாடு உட்பட அனைத்து விலங்குகளும் பறவைகளும் உணவுக்காகக்கொல்லப்பட்டன. யாகங்களில் பலியிடப்பட்டன. பசுக்களை பார்ப்பனர்களுக்கும் கொடுத்துவிட வேண்டும் என்ற கருத்தும் வந்தது.

(3) வேதங்களுக்கு விளக்கம் சொல்ல வந்த உபநிடதங்கள் எழுதப்பட்ட காலத்தில் தான் விலங்குகளைப் பலியிடுவதற்கு எதிராக சில கருத்துகள் சொல்லப்பட்டன. புராணங்களில் பசுவும் பார்ப்பனரும் ஒன்றாகக் கருதப்படவும் வழிபடவும் கதைகள் எழுதப்பட்டன. “மனு” ஸ்மிரிதியிலும் கூட மாடு உண்பது தடை செய்யப்படுவதில்லை.

(4) தமிழ் இலக்கியங்களின் அடிப்படை அறநூலான திருக்குறள் “கொல்லாமை” என்று பேசியதே தவிர எந்த விலங்கும் புனிதமானது என்று கூறவில்லை.

(5) சங்க இலக்கியங்களில் பார்ப்பனர்கள் இறைச்சி அதுவும் கொழுத்த பசுமாட்டின் இறைச்சியை விரும்பி உண்டதைக் கூறும் பல பாடல்கள் உள்ளன.

(6) மணிமேகலைக் காப்பியத்தில் பார்ப்பனர் வீட்டு வாசலில் யாகத்திற்காகக் கட்டப்பட்டிருந்த பசுமாட்டை அவிழ்த்து அதனைக் காப்பாற்றிய ‘ஆபுத்திரனை” பார்ப்பனர்கள் அனைவரும் சேர்ந்து தாக்கியதும், அவனை வளர்த்த பார்ப்பனர் இனி நீ என் மகனல்ல என்று வீட்டைவிட்டு விரட்டிய செய்தியும் சொல்லப்பட்டுள்ளது.

(7) சிலப்பதிகாரத்திலும், பின் வந்த பக்தி இலக்கியங்களிலும் ஆரிய மயமான கடவுள் வழிபாடு, சாதி அமைப்பு, பெண்ணடிமை இவை அனைத்தும் போற்றப்பட்டு, பார்ப்பனர்களின் செல்வமாகிய பசுமாடும் தனிச்சிறப்பு பெற்றதாக எழுதப்பட்டது. அதற்கான அரசமுறைப் பாதுகாப்புகளை அரசர்களை அண்டி வாழ்ந்த பார்ப்பனர்கள் சாதித்துக் கொண்டார்கள்.

(8) சமணர்களும், பௌத்தர்களும் துறவு வாழ்க்கையில் ஒழுக்கத்தையும், கொல்லாமையையும் வலியுறுத்தி மக்களிடம் பெரு மதிப்பைப் பெற்றார்கள். அதன் பின்பே பார்ப்பனர்கள் முதலில் மாட்டுக்கறிச் சாப்பிடுவதை நிறுத்தினார்கள். பிறகு இறைச்சி சாப்பிடுவதையே நிறுத்தி விட்டு, சைவ உணவே உயர்ந்தது. அதை உண்ணும் பார்ப்பனரே உயர்ந்தவர்கள் என்ற இடத்தை உருவாக்கினார்கள். பசு பார்ப்பனரின் செல்வமாகியது.

(9) தங்கள் மேலாண்மையை வடக்கே குப்த வம்ச அரசர்கள் மூலமும் தெற்கே பிற்காலச்சோழ, பாண்டிய மன்னர்கள் மூலமும் பார்ப்பனர்கள் நிறுவினார்கள். பசுவை பலி கொடுக்கக்கூடாது என்பதை அரசாணையாக வெளிப்படச் செய்தார்கள்.

(10) மன்னர்களுக்கு அருகில் இருந்து ஆலோசனை கூறும் அதிகாரத்தைப் பெற்ற பார்ப்பனர்கள் கூறுவதே தர்மம் என்று நம்பிய இஸ்லாமிய மன்னர்களும் பசுவைப் பலியிடக் கூடாது என்று உத்தரவிட்டார்கள். பாபரும் ஹீமாயூனும் மிகக்கடுமையாக அந்தத்தடை உத்தரவை செயல்படுத்தினார்கள். ஆனால் முகலாய மன்னர்கள் ஆட்சிக்காலத்தி0ல்தான் மாட்டுக்கறி உண்ணும் பழக்கம் இந்தியாவில் ஏற்பட்டது என்று தங்கள் வழக்கப்படி பொய்மையை மெய்போல் எழுதி அதை வரலாறாக்கும் முயற்சி இந்தியாவில் நடக்கிறது.



## ஒரு வரலாற்றுப் பின்னணி

# வழக்கறிஞர் அ.அருள்மொழி – நேர்காணல் – தொடர்

(11) முகலாய மன்னர்களைத் தொடர்ந்து, போர்த்துகீசியர்களும், ஆங்கிலேயர்களும் இந்தியத்துணைக்கண்டத்தின் பகுதிகளை ஆளத் தொடங்கியபோதும் பசுமாடு பலியிடப்படுவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவை தனியே வெட்டப்பட்டு உணவாகப் பயன்படுத்தும் வழக்கம் இருந்து வந்தது.

இந்த வரலாற்றின் தொடர்ச்சியாக ஆங்கிலேயரை எதிர்ப்பதற்கு இந்தியர்கள் என்ற அடிப்படையை விட்டு ஹிந்துக்கள் என்ற பிரிவினைக்குரலை முன் வைத்தவர்கள் பஞ்சாப், மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் வாழ்ந்த பார்ப்பனர்களே அவர்களால்தான் பசுப்பாதுகாப்பு என்ற முழக்கமும், பசு நம் தாய் என்கிற தர்ம சாஸ்திரக்கதையாடல்களை மையமாகக் கொண்ட இயக்கமும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் இந்தியாவில் தொடங்கப்பட்டது. அதுவும் குறிப்பாக 1824இல் குஜராத்தில் பிறந்த மூல்சங்கர் என்ற சுவாமி தயானந்த சரஸ்வதி என்று பின்னர் பெயர் மாற்றம் பெற்ற பார்ப்பனர் ஆர்யசமாஜம் என்ற அமைப்பை நிறுவி பிரச்சாரத்தைத் தொடங்கிய பிறகுதான் "பசு" ஹிந்துத்வ அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது. அவர்தான் முதல் கௌரக்ஷினிசபா (GOWRAKSHINI SABHA) என்ற அமைப்பை 1882 ஆம் ஆண்டில் நிறுவினார். அதற்கு முன்பே பஞ்சாப் பகுதிகளில் பசுப்பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரில் 1870 ஆம் ஆண்டில் போராட்டங்கள் நடந்தன. 1893 இல் நாக்பூர், பனாராஸ் ஹரித்துவார் ஆகிய இடங்களில் பெரும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

1880 ஆம் ஆண்டு முதல் 1893 ஆம் ஆண்டிற்குள் நூற்றுக்கணக்கான கோசாலைகள் நிறுவப்பட்டன. மக்களிடம் பணமும் உணவும் பொருட்களும் நன்கொடையாகப் பெற்று கோசாலைகளுக்கு வழங்கப்பட்டன. கசாப்புக்கடைகளில் இருந்த பசுக்களை பறித்துச் சென்று பராமரித்து இந்த பசுரட்சகர்களின் வேலையாக இருந்தது. இப்படி நடந்த போராட்டங்களை ஆங்கிலேயர்களுக்கு எதிரான சுதந்திரப் போராட்டமாக ஹிந்துவாதிகள் சித்தரித்து அதற்காகக் கலவரங்களிலும் ஈடுபட்டார்கள். அதே நேரத்தில் அதற்கான எதிர்க்குரலும் ஹிந்து மதக்குழுக்களிடம் எழுந்தன. சான்றாக, மனிதர்களை விடவும் பசுக்கள் உயர்ந்தவை என்கிற வாதத்தை இந்து மதத்தைக் காப்பாற்றுவதற்கும் இந்தியாவை ஹிந்து நாடாக அறிவிப்பதற்கும்; செயல்படுகின்ற அமைப்புகளின் பிரச்சாரச் சின்னமாக விளங்கும் விவேகானந்தர் சொன்ன கருத்து வித்தியாசமானது. மனிதர்களைப் புறக்கணித்துவிட்டு பசுவைப் பாதுகாக்கப் போராடும் மனிதர்கள் பற்றி விவேகானந்தர் என்ன கூறினார் என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியம்.

சென்னை ராமகிருஷ்ணமடம் வெளியிட்ட எனது சிந்தனைகள் என்ற நூலில் சுவாமி விவேகானந்தர் உடன் இருந்து அவரதுக் கருத்துக்களை பதிவு செய்தவர் சரத் சந்திரவர்த்தி என்ற சீடர். அதைத் தமிழில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் ஏ.சுப்பிரமணியம் அவர்கள்.அந்த நூலின் பக்கம் 7 முதல் 10 வரை உள்ள பதிவு இது. **நாள் 1897 பிப்ரவரி 20 இடம் கல்கத்தாவில் பாக்பஜாரில் காலம்** சென்ற பிரியநாத் முகோபாத்யாயரின் வீடு.

'நரேந்திரபாபு சென்றதும் பசுக்களைப் பாதுகாக்கும் சங்கத்தின் மிக உற்சாகமான பிரசாரகர் ஒருவர் சுவாமிஜியைக் காண உள்ளே வந்தார். அவர் காவிக் குல்லா அணிந்து ஏறக்குறைய ஒரு துறவி போலவே உடை அணிந்திருந்தார். மேற்கிந்தியாவைச் சார்ந்தவர் என்பது தெளிவாகத் தெரிந்தது. இந்தப் பசு பாதுகாப்புச் சங்கத்தின் பிரசாரகர் வருவது அறிவிக்கப் பட்டதும் சுவாமிஜி அவரைக் காண அந்த அறையை விட்டு, அதை ஒட்டியிருந்த வராந்தாவிற்கு வந்தார். அங்கிருந்த பிரசாரகர் சுவாமிஜியை வணங்கித் தன் கையில் இருந்த பசுமாதாவின் படம் ஒன்றைக் கொடுத்தார். சுவாமிஜி அதை வாங்கிச் சிறிது நேரம் பார்த்து விட்டு அருகிலிருந்தவரிடம் கொடுத்தார். பிறகு இருவருக்கும் கீழ்வரும் உரையாடல் தொடர்ந்தது.

சுவாமிஜி: உங்கள் சங்கத்தின் நோக்கம் என்ன?

பிரசாரகர்: நாங்கள் கசாப்புக் கடைக்காரனிடமிருந்து பசுமாதாவைக் காப்பாற்றுகிறோம். பல இடங்களில் பசு காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆங்கே நோயுற்ற, வயதான பசுக்களையும், கசாப்புக்கடைக்காரர்களிடமிருந்து மீட்டு வந்த பசுக்களையும் தீனி முதலியவை கொடுத்துக் காப்பாற்றுகிறோம்.

சுவாமிஜி: உண்மையில் இது நல்ல காரியம்தான். இந்தச் செலவிற்கு உங்களுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது?

பிரசாரகர்: உங்களைப் போன்ற பெரியவர்கள் கருணையுடன் தரும் நன்கொடைகளால்தான் இந்தக் காரியங்கள் நடக்கின்றன.

சுவாமிஜி: இதுவரையில் எவ்வளவு பணம் செலவழித்திருக்கிறீர்கள்?

பிரசாரகர்: மார்வாரிகள் இதற்கு மிக அதிகமாக உதவினார்கள். இந்த நல்ல காரியத்திற்கு அவர்கள் தாம் ஒரு பெரிய தொகையைத் தந்திருக்கிறார்கள்.

சுவாமிஜி: மத்திய இந்தியாவில் இப்போது பயங்கரமான பஞ்சம் மக்களை வாட்டுகிறதே! அந்தப் பஞ்சத்தில் ஒன்பது லட்சம் மக்கள் பட்டினியால் செத்துப் போனதாக இந்திய அரசாங்கம் அறிக்கை வெளியிட்டிருக்கிறதே. உங்கள் சங்கம் இந்தப் பஞ்சத்தில் மக்களைக் காப்பாற்ற ஏதாவது செய்ததா?

பிரசாரகர்: நாங்கள் இது போன்ற பஞ்சங்களிலும் துன்பங்களிலும் உதவுவதில்லை. இந்தச் சங்கம் பசுமாதாவைக் காப்பாற்றுவதற்கு மட்டும்தான் அமைக்கப்பட்டுள்ளது.


■ நம்பிக்கை என்பது ஒழுக்கம் மற்றும் பயிற்சியின் மூலமாக வருகிறது – ராபர்ட் கியோசாகி

சுவாமிஜி: இந்தப் பஞ்சத்தில் உங்களுடைய சகோதாரர்களும் சகோதரிகளுமாகிய ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் சாவின் கொடிய பசிக்கு இரையாகிக் கொண்டிருக்கிறார்கள். வசதி இருந்தும் அவர்களுக்கு உணவு கொடுத்துக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை என்பதை நீங்கள் நினைக்கவில்லையா?

பிரசாரகர்: அதை நாங்கள் செய்ய வேண்டியதில்லை. இந்தப் பஞ்சம் அவர்களின் கர்மத்தின் விளைவாக, பாவங்களின் விளைவாக வந்திருக்கிறது. ‘கர்மம் எப்படியோ அப்படியேதான் பலனும்”.

இதைக் கேட்டதுதான் தாமதம்! சுவாமிஜியின் கண்கள் கோபத்தால் நெருப்புத் துண்டங்கள் போல் ஜொலித்தன. அவரது முகம் உணர்ச்சியால் சிவந்து போயிற்று. தன் கோபத்தையும் உணர்ச்சிகளையும் அடக்கிக் கொண்டவராக, ‘சொந்தச் சகோதரர்கள் பசியாலும் பட்டினியாலும் செத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் உயிரைக் காப்பாற்ற ஒரு பிடி சோறு கூடத் தராமல் அவர்களிடம் சிறிதும் இரக்கம் கொள்ளாமல், மாடுகளையும் பறவைகளையும் காப்பாற்றுவதற்காக உணவை வாரி வாரித் தரும் சங்கங்களிடம் எனக்குச் சிறிது கூட அனுதாபமோ மதிப்போ கிடையாது. அத்தகைய சங்கங்களின் மூலம் ஏதாவது நல்லது நடக்கும் என்று நான் நம்புவதே இல்லை. மனிதன் பட்டினியால் சாவதற்கு அவனது கர்மங்கள் காரணம் என்று கர்ம நியதிக்கு நீங்கள் வக்காலத்து வாங்குவதாக இருந்தால், இந்த உலகத்தில் எதற்காகவும் முயற்சி செய்வதோ போராடுவதோ அனைத்துமே பயனற்ற வேலைதான். உங்களுடைய பசுக்களைக் காப்பாற்றும் வேலையும் அப்படிப்பட்டது தான். அந்தக் கொள்கையின்படிப் பார்த்தால் பசுமாதாவும் அதன் கர்மத்தால்தான் கசாப்புக்கடைக்காரரிடம் மாட்டிக் கொண்டு சாகிறது. நாம் அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியமே இல்லை” என்றார்.

இதைக் கேட்ட பிரசாரகர் கொஞ்சம் வெட்கம் அடைந்தவராகத் தடுமாறினார், பிறகு சமாளித்துக் கொண்டு, ‘நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் பசு நமது அன்னை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே!” என்றார்.

சுவாமிஜி லேசாகச் சிரித்தபடி, ‘ஆமாம், பசு நம் தாய் தான், பசுதான் நம் அன்னை என்பது எனக்கு இப்போது புரிகிறது. இல்லையென்றால் நம்மைப் போன்ற இவ்வளவு அறிவு நிறைந்த பிள்ளைகளை வேறு யார் பெற முடியும்?” என்றார்.

பிரசாரகர் பிறகு பசு மாதாவைக் காப்பாற்றுவது பற்றி ஒன்றுமே பேசவில்லை. சுவாமிஜியின் கிண்டலின் முழுப் பொருளையும் அவர் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றியது. சுவாமிஜியிடம் பசுமாதாவைக் காப்பாற்றும் தங்கள் சங்கத்திற்காக ஏதேனும் கொடுக்கும்படி அவர் மீண்டும் கூறினார்.

சுவாமிஜி: நான் ஒரு துறவி, பக்கிரி, உங்களுக்கு உதவுகின்ற அளவுக்கு எனக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கும்? அப்படி எனக்கு எங்கிருந்தாவது பணம் கிடைத்தாலும் அதை நான் துன்பப்படும் மனிதர்களின் உதவிக்காகவே முதலில் பயன்படுத்துவேன். முதலில் மனிதன்தான் காப்பாற்றப்பட வேண்டும். அவனது பசிக்கு உணவும், அறிவுக்குக் கல்வியும், ஆன்மீக ஞானமும் கொடுக்க வேண்டும். இவையெல்லாம் செய்த பிறகு ஏதாவது பணம் எஞ்சினால் உங்கள் சங்கத்திற்குக் கொடுக்கலாம்.

இதைக் கேட்டதும் பிரசாரகர் சுவாமிஜியை வணங்கிவிட்டு எழுந்து வெளியே சென்றார். சுவாமிஜி எங்களைப் பார்த்துப் பேசத் துவங்கினார்:




▪ வாழ்கை என்பது 10 சதவீதம் அனுபவமும் , 90 சதவீதம் அதை கொண்டு நாம் எப்படி செயல்படுகிறோம் என்பதாகும் – டொரோத்தி.ம்.நெட்தேர்மேயர்

‘என்ன பொய்யான பேச்சுக்கள் இவை! ‘மனிதர்கள் கர்மபலனால் சாகிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதால் என்ன பலன்?’ என்று அந்த மனிதன் கேட்கிறான். இந்த நாடு அடியோடு நாசமாகி விட்டது என்பதற்கு இதுவே சாட்சி. உங்கள் இந்து சமயத்தில் கர்ம நியதிக் கொள்கை எவ்வளவு கேவலமாகப் பயன்படுத்தப்படுகிறது பார்த்தீர்களா? மனிதர்களாக இருந்து கொண்டு மற்ற மனிதர்களுக்காகச் சிறிதும் இரக்கம் காட்டாத இவர்களை இவர்களை மனிதன் என்று நினைக்கலாமா?” சுவாமிஜி இவ்வாறு பேசும்போது மிகுந்த உடல் வேதனையும் மன வேதனையும் அடைந்தது போல் தோன்றியது. பிறகு சுவாமிஜி புகை பிடித்தவாறே சீடரிடம், ‘நல்லது மறுபடியும் என்னை வந்து பார்” என்று கூறினார்.

இப்படி இருவேறு குரல்கள் தீவிர ஹிந்துவாதிகள் இடம் இருந்து வந்தபோதும் பசு உட்பட்ட விலங்குகளை உண்பவர்கள் அதுபற்றி கவலைப்படவில்லை. ஆனால் இப்போராட்டத்தை காங்கிரஸ் மூலமாக சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதில் பார்ப்பனர்கள் ஈடுபட்டனர். அதற்கு வாய்ப்பாக 1857 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் படையின் இந்திய ராணுவ வீரர்கள் பயன்படுத்திய குண்டுகளில் பசுவின் கொழுப்பும், பன்றியின் கொழுப்பும் பூசப்பட்டதென்ற பிரச்சாரமும் அதனால் எழுந்த சிப்பாய்க்கலகமும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை வேறொரு செயல்பாட்டுக்குத் தள்ளியது. அதாவது விலங்குகளைக் காப்பதில் பிரிட்டிஷ் அரசு கவனம் செலுத்தும் என்று அறிவிப்பது அதற்கான முதல் சட்டம் 1890 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் மிக முக்கியமான செய்தி என்னவென்றால் 1890 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் தேதி விலங்குகள் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் சட்டம். (XI of 1890) இச்சட்டம் முழுமையான பாகிஸ்தான் மாநிலத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. இந்த சட்டத்துடன் இந்து அரசியல் தலைவர்கள் நிம்மதி அடைந்திருக்கலாமே. அதுதான் இல்லை. ஏனெனில் அவர்கள் கேட்ட சட்டமானது “பசுவை” மட்டும் கொல்லத்தடைவிதிக்கும் சட்டம். ஆனால் பிரிட்டிஷ் அரசு, போட்ட சட்டமோ” அனைத்து விலங்குகளையும் துன்புறுத்துவதில் இருந்தும் காப்பாற்றும் சட்டம். எங்களுக்குத் தேவை ஜீவ காருண்யமல்ல. பசுமாதா புனிதம் என்று அறிவிப்பதுதான் என்று பார்ப்பனர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள்.

அதனைத் தீவிர அரசியலின் அங்கமாக்கியவர் காங்கிரஸ் தலைவரான பாலகங்காதர திலகர் அவர் 1920 இல் இறந்து விடுகிறார். பசுவின் மீதான தன் பாசத்தை ஹிந்து தர்மம் என்று அடையாளப்படுத்திய மகாத்மா காந்தி அதனை ஹிந்து அரசியலின் சின்னமாக முன்னெடுக்கவில்லை. ‘என் சகோதரனின் உணவு பசுதான் என்றால் அவனிடம் கையெடுத்து கும்பிட்டு பசுவை விட்டு விடுமாறு கேட்பேன் முடியாதென்றால் பசுவுக்காக நான் என் சகோதரனைக் கொல்ல மாட்டேன் என்று உறுதியாகக் கூறினார். 1924 ஆம் ஆண்டில் முடிவடைந்த உலகப்போருக்குப் பிறகு இந்திய முஸ்லீம்கள் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து ஒரு பெரும் இயக்கம் நடத்தினார்கள். அதன் பெயர் கிலாபத் இயக்கம். அந்தப்போராட்டத்தினை நடத்திய இசுலாமிய தலைவர்கள் அதில் கலந்து கொள்ள இந்து காங்கிரஸ் தலைவர்களையும் அழைத்தார்கள். இந்தப்போராட்டத்தை காந்தி ஆதரித்தார். அந்த நேரத்தில் தாங்கள் பசுவைப் பலியிடுவதை நிறுத்திக்கொள்வதாக இஸ்லாமியத் தலைவர்கள் காந்திக்கு உறுதியளித்தார்கள் என்பதை மகாத்மா காந்தியின் கட்டுரைத் தொகுப்பில் காணமுடிகிறது.

இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான அறிகுறிகள் 1942 முதல் வெளிப்படையாகத் தெரிந்தன. அந்த காலகட்டத்தில் காங்கிரசில் இருந்த மேல்ஜாதித் தலைவர்களும், இந்து மகாசபை மற்றும் ஆர்.எஸ். எஸ். தலைவர்களும் அரசியல் சாசனக் கொள்கை வரைவுக்குழுவுக்கு ஏகப்பட்ட அழுத்தம் கொடுத்தார்கள். ஆனால் காங்கிரசு கட்சி அப்படி ஒரு நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அதுபற்றி 1947 ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் நாளன்று தனது காலை நேர பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மாகாந்தி பேசினார். அவ்வுரையில், பசுக்கொலையை சட்டப்படித் தடை செய்ய முடியாது என்ற அவரது கருத்து மிக உறுதியாக வெளிப்பட்டது.

‘ராஜேந்திரபாபு அவர்கள் என்னிடம் கூறுகிறார், அவருக்கு பசுக்கொலையை தடுக்கச் சொல்லிக்கேட்டு 50,000 அஞ்சல் அட்டைகளும் சுமார் 25 ஆயிரம் அல்லது 30 ஆயிரம் தந்திகளும் வந்ததாம். இதுபற்றி நான் முன்பே உங்களிடம் பேசியிருக்கிறேன். எதற்கு இப்படி வெள்ளம்போல தந்திகளும், கடிதங்களும்? அவற்றால் எந்தப்பயனும் இல்லை.

என்னிடம் இன்னொரு தந்தி இருக்கிறது. அந்தத் தந்தி சொல்கிறது ஒரு நண்பர் இதற்காக உண்ணாநோன்பு தொடங்கிவிட்டாராம். இந்தியாவில் பசுக்கொலையைத் தடை செய்து எந்த சட்டமும் இயற்ற முடியாது. இந்துக்கள் பசுக்களை கொல்ல தடைவிதிக்கப்பட்டவர்கள்தான் என்பதில் எனக்கு அய்யமில்லை. நான் பசு சேவை செய்வதற்காக உறுதி பூண்டுள்ளேன். ஆனால் என்னுடைய மதமே மற்ற இந்தியர்களின் மதமாகவும் இருக்க முடியும்? ஹிந்து அல்லாத இந்தியர்களுக்கு அது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவதாகத்தான் தோன்றும்.

மத விசயத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் இருக்காது என்று நாம் வீட்டுக்கூரையின் மேலிருந்து கூவுகிறோம். நமது பிரார்த்தனைகளில் குரான் வசனங்களையும் பாடுகிறோம். ஆனால் என்னை அந்த வசனங்களை பாடுமாறு யாராவது வற்புறுத்தினால் கட்டாயப்படுத்தினால் நான் அதை விரும்ப மாட்டேன். பசுவை கொல்லக்கூடாது என்று தானே நினைக்காத ஒருவரை நான் எப்படி வற்புறுத்த முடியும்? இந்த இந்திய யூனியனில் ஹிந்துக்கள் மட்டுமே வசிக்கிறார்கள் என்ற நிலையில்லை. முஸ்லீம்கள், பார்சியர், கிறிஸ்தவர் மற்றும் பிற மதக்குழுவினரும் இங்கு வாழ்கிறார்கள்.

இந்தியா இப்போது ஹிந்து நாடாகிவிட்டது என்று நினைப்பது மிகத்தவறானது. இந்தியா இங்கு வாழும் அனைவருக்கும் சொந்தமானது. இங்கு நாம் பசுவைக் கொல்லத் தடை விதித்தால் பாகிஸ்தானில் அதற்கு நேர் எதிராக நடந்தால் அதன் விளைவு எப்படி இருக்கும்? ஒருவேளை. சிலை வழிபாடு ஷரியத் சட்டத்திற்கு எதிரானது அதனால் ஹிந்துக்களும் கோயிலுக்குச் செல்ல


▪ நாம் ஒவ்வொரு முறை நமது பயத்தை எதிர்க்கொள்ளும் போதும், நமது பலம், தைரியம் மற்றும் தன்னம்பிக்கை அதிகரிக்கிறது – தியோடர் ரூஸ்வெல்ட்

அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று இசுலாமியர்கள் சொன்னால் என்னவாகும்? நான் ஒரு கல்லில்கூட கடவுளைக் காண்கிறேன். ஆனால் அந்த நம்பிக்கையைக் கொண்டு நான் எப்படி மற்றவர்களைக் காயப்படுத்துவது? எனவே, நான் கோயிலுக்குச் செல்லக்கூடாதென்று தடுக்கப்பட்டால், நான் கட்டாயமாகக் கோயிலுக்குப் போவேன். அதனால்தான் சொல்கிறேன் இந்தத் தந்திகளும், கடிதங்களும் நிறுத்தப்படவேண்டும். இதற்கு பணம் செலவழிப்பது முறையல்ல.

தவிர, வசதியான ஹிந்துக்கள் பலர் பசுமாடு கொல்லப்படுவதை ஊக்கப்படுத்துகிறார்கள். ஆம். அவர்கள் தங்கள் கைகளால் அதைச் செய்யவில்லை. ஆனால், பசுமாடுகள் கொல்லப்படும் ஆஸ்திரேலியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும், பசுமாடுகளை அனுப்பி அங்கே அவை கொல்லப்பட்டு, அவற்றின் தோலால் செய்யப்பட்ட காலணிகளை திரும்ப இந்தியாவுக்கே அனுப்பி வைக்கச் செய்வது யார்? எனக்கு ஒரு தீவிர வைணவ ஹிந்துவைத் தெரியும். அவர் தன் குழந்தைகளுக்கு மாட்டுச் சூப்பை குடிக்கக் கொடுப்பார். ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று நான் கேட்டதற்கு மாட்டு இறைச்சியை மருந்துக்காகச் சாப்பிடுவது தவறில்லை என்று கூறினார்.

உண்மையில் நாம் மதமென்றால் என்ன என்று நின்று நிதானமாக நினைத்துப் பார்ப்பதில்லை, மாறாக பசுவைக் கொல்வதைச் சட்டம்போட்டு தடை செய்ய வேண்டும் என்று கூச்சலிட்டுக் கொண்டே இருக்கிறோம். கிராமங்களில், ஹிந்துக்கள் பெருஞ்சுமைகளை மாடுகளே நசுங்கிப்போகும் அளவிற்கு அவற்றின் மேல் ஏற்றி இழுக்கச் செய்கிறார்களே, அது பசுவதை இல்லையா.. .. என்னதான் மெதுவாக நடந்தாலும் அதுவும் பசுவதைதானே? எனவே தான் அரசியல் சாசன வரைவுக்குழுவில் இந்தப் பிரச்சனையை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை, என்று நான் சொல்கிறேன்.

மகாத்மா காந்தியின் இந்த உரையில் பசுவதைத் தடுப்பு பற்றிய கருத்து இத்துடன் முடிகிறது. ஆனால் அதற்குப்பிறகு அவர் தெரிவித்த கருத்துக்கள் ஹிந்து இசுலாமியர் ஒற்றுமை மற்றும் இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்கிற அவரது ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடாகும். இன்றைய இந்தியச் சூழலில் நாம் கட்டாயம் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து காந்தியின் உரையைப் படிப்போம்.

'என்னைக் கேட்கிறார்கள், இசுலாமியர்களால் தூண்டப்படும் வன்முறைகளைப் பார்க்கின்ற பொழுது எந்த இசுலாமியரை நம்புவது என்று முடிவு செய்வது மிகக் கடினமாக இருக்கிறது; இந்திய இசுலாமியர்களிடம் நமது அணுகுமுறை என்னவாக இருக்க வேண்டும்? பாகிஸ்தானில் இருக்கும் இசுலாமியர் அல்லாதவர்கள் என்ன செய்ய வேண்டும்? என்று.

நான் ஏற்கனவே இந்தக் கேள்விக்கு விடை சொல்லி விட்டேன். மீண்டும் சொல்கிறேன் இந்தியாவில் இருக்கும் அனைத்து மதங்களும் பெரும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. சீக்கியர்கள் ஹிந்துக்கள், இசுலாமியர், கிறிஸ்தவர்கள் என ஒவ்வொரு மதக்குழுவினரும் எப்படி நடந்து கொள்கிறார்கள்

**ஒரு போதும் 'பசுமாடு' ஒட்டு மொத்த இந்தியகலாச்சாரத்தின் சின்னமாக இருந்ததில்லை. ஒட்டு மொத்தமாக இந்தியாவே இருந்ததில்லை என்பதுதானே வரலாறு.**

என்பதையும், அவர்கள் இந்தியாவின் செயல்பாடுகளை எப்படி மேற்கொள்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பாகிஸ்தான் வேண்டுமானால் இசுலாமியர்களுக்கு உரியது என்று சொல்லப்படலாம். ஆனால் இந்தியா அனைவருக்கும் உரியது. உங்களுக்குள் இருக்கும் கயமைத்தனத்தை உதறித்தள்ளிவிட்டு துணிவுடன் சிந்தித்தால் நீங்கள் இசுலாமியரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற ஆலோசனை செய்யத் தேவையில்லை. ஆனால் இன்று நமக்குள் கயமை இருக்கிறது. அதற்கானப் பழியை நான் ஏற்கனவே ஏற்றுக்கொண்டு விட்டேன்.

முப்பது ஆண்டுகளாக நான் கற்றுத்தந்த அனைத்தும் இவ்வளவு வலுவற்றதாக இருப்பதை நினைத்து நான் வியப்படைகிறென். வன்முறையற்றவழி என்பது கயவர்களுக்கான ஒரு ஆயுதமாக இருக்க முடியும் என்று நான் எப்படித் தீர்மானித்தேன். இப்போதும், நாம் உண்மையிலேயே துணிவுடையவர்களாகமாறி இசுலாமியர் மீது அன்பு காட்டினால், நமக்கு எதிரான சதிச்செயல்கள் மூலம்அடையப்போவது என்ன என்று அவர்களும் நின்று யோசிக்கத் தொடங்குவார்கள். அவர்கள் அன்புக்கு பதிலாக அன்பைக் கொடுப்பார்கள். இந்தியாவில் இருக்கும் கோடிக் கணக்கான இசுலாமியரை நாம் அடிமைப்படுத்தி வைக்க முடியுமா? மற்றவர்களை அடிமைப்படுத்த பார்ப்பவன் தானே அடிமையாவான். நாம் வாளுக்கு வாள், தடிக்குத்தடி, உதைக்கு உதை என்ற முறையில் பதில் சொல்லிக் கொண்டிருந்தால், பாகிஸ்தானின் நடப்புகள் மட்டும் வேறுவிதமாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் எவ்வளவு விரைவாக சுதந்திரத்தைப் பெறுகிறோமோ அவ்வளவு விரைவில் அதை இழந்துவிடுவோம்.

இந்த உரையில் காந்தி குறிப்பிடும் பாபு ராஜேந்திர பிரசாத் அவர்கள் தான் சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவரான Dr.பாபு ராஜேந்திர பிரசாத் 1950 முதல் 1962 ஆம் ஆண்டு வரை பதவி வகித்தவர். பீகாரில் பிறந்தவர். 1947 இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு இந்தியாவின் அரசியல் சாசனக் கொள்கை வரைவுக்குழுவின் தலைவராக இருந்தவர் காங்கிரசில் இருந்த இவரைப் போன்ற பலர் தீவிர ஹிந்துக் கொள்கை உடையவர்களாக இருந்தார்கள். அவர்களுடன் இந்து மகாசபையும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் தொடர்பில் இருந்தன என்பதையே பசுக்கொலைத் தடுப்புக்கான கடிதங்களும்,

தந்திகளும் மகாத்மா காந்திக்கு அனுப்பப்படாமல் பாபு ராஜேந்திர பிரசாத்துக்கு அனுப்பப்பட்ட செய்தி உறுதிப்படுத்துகிறது. இந்திய விடுதலைக்குப் பிறகும்கூட பசுவதைத் தடைச்சட்டத்தை இந்திய அளவில் நிறைவேற்றுவதற்கு ஆர்.எஸ்.எஸ் பாபு ராஜேந்திர பிரசாத்தை பெருமளவிற்கு நம்பியிருந்தது என்பதை இனிவரும் செய்திகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம். *1947* இல் ஆற்றிய மகாத்மா காந்தியின் இந்த உரையை *2015* ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச மாநிலத்தின் தாத்ரி என்ற ஊரில் மாட்டுக்கறி வைத்திருந்ததாக ஒரு குடும்பமே கொடுமையான முறையில் குண்டர்களால் தாக்கப்பட்டு முகம்மது அக்லக் என்ற முதியவர் கொல்லப்பட்டபோது தி வயர் என்ற ஆங்கில ஏடு மீண்டும் வெளியிட்டது



இப்படியாக விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காத ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தன் பார்ப்பனத் தூதுவர்களை காங்கிரஸ் கட்சியில் நிறையவே வைத்திருந்தது. ஆனாலும் இந்திய அரசியல் சாசனத்தில் பசுக்கொலையைத் தடுக்க தீவிரச் சட்டப்பிரிவை அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. அதற்குக் காரணம் அரசியல் சாசனக் குழுவின் தலைவராக இருந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களே. ஆனால் பார்ப்பனர்களும், சனாதனிகளும் எவ்வளவோ முயன்றும் அவர்களால் பசுப்பாதுகாப்பு என்பதை அரசியல் சாசனத்தில் வரையறைக்குள் கொண்டு வர முடியவில்லை. லாலா லஜபதிராய், மதன்மோகன் மாளவியா, ராஜேந்திர பிரசாத், போன்ற தலைவர்களின் முயற்சி தோல்வியடைந்தது. ‘‘இந்திய அரசியல் சாசனத்தை” எழுதுவதற்கான கொள்கை வரைவுக்குழுவின் விவாதத்தில் *(Constitutional Assembly Debates)* இந்துக்களிலேயே பல பிரிவு மக்களும், கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் என ஒரு பெரும் எண்ணிக்கையிலான இந்திய மக்களின் உணவாக இருக்கும் மாட்டிறைச்சிக்கு எப்படித் தடை விதிக்க முடியும். அதையும் அரசியல் சட்டத்திலேயே அதை எப்படிச் சேர்க்கமுடியும் என்ற விவாதம் பலவாறு விவாதிக்கப்பட்டது. கடைசியில் பசுமாட்டைப் பற்றிய குறிப்பு கூட இல்லாமல் அரசியல் சாசனம் வரைவு செய்யப்பட்டது. அந்நிலையில் என்ற பஞ்சாபைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் வழக்கறிஞருமான பண்டிட் தாகூர்தாஸ்பார்கவர் வரைவுக்குழுவின் பரிசீலனைக்கு ஒரு திருத்தத் தீர்மானத்தை முன் மொழிந்தார். அத்தீர்மானமானது இந்திய அரசியல் சாசனத்தின் உறுப்பு *38A* வாக அரசுக்கான வழிகாட்டு நெறிமுறைகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. அப்பிரிவு என்ன சொல்கிறது. “அரசானது விவசாயம் மற்றும் விலங்குப் பாதுகாப்பினை புதிய முறையில் அறிவியல் பூர்வமாக பாதுகாத்து வளர்க்கவும், குறிப்பாக கால்நடைகளைப் பாதுகாத்து மேம்படுத்தவும் பசு மற்றும் பயன்தரும் விலங்குகளையும் பால்தரும் கால்நடைகளையும் அவற்றின் கன்றுகளையும் கொல்வதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.” இப்படியாக பசு உட்பட விவசாயத்திற்கு உதவும் அனைத்து கால்நடைகளையும், பால்கொடுக்கும் விலங்குகளையும் சேர்த்துதான் அரசியல் சாசனத்தின் பாதுகாப்பிற்குள் கொண்டுவர முடிந்தது. இது ஆர். எஸ்.எஸ். தலைமைக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. அவர்கள் திட்டமிட்டது பசுப்பாதுகாப்பை அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் சேர்ப்பது. அதனைத் தோற்கடித்து பசு என்பது பால் கொடுக்கும் விவசாய விலங்குகளில் ஒன்று இந்தியாவின் புனிதச்சின்னமல்ல என்று ஆக்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மீது வன்மத்தையும் ஆத்திரத்தையும் பார்ப்பனர்கள் வெளிப்படுத்தி வருவதன் பின்னணியில் இதுவும் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். *1950* ஆம் ஆண்டு நவம்பர் *25* ஆம் தேதி இந்திய அரசியல் சாசனத்தின் வரைவை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு விட்டது. இனி நாம் அரசியல் சாசனத்திற்குள் பசுவோடு நுழைய என்ன வழி என்று ஆர்.எஸ்.எஸ் திட்டமிடத் தொடங்கியது.

ஒரு போதும் “பசுமாடு” ஒட்டு மொத்த இந்தியகலாச்சாரத்தின் சின்னமாக இருந்ததில்லை. ஒட்டு மொத்தமாக இந்தியாவே இருந்ததில்லை என்பதுதானே வரலாறு. கிழக்கிந்தியக்கம்பெனியின் வணிக ஆதிக்கத்தில் விழுந்து கிடந்த பல்வேறு நகரங்களையும், குறுநில மன்னர்கள் மற்றும் ஜமீன்தார்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளையும் இணைத்து தன் ஆட்சி அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆட்சியாளர்கள், தங்களுடைய அதிகார வசதிக்காக உருவாக்கிய கட்டமைப்பே இந்தியா. இந்தியாவின் ஆட்சி முறை, நீதிமன்றங்கள் தபால் தந்தித்துறை, ரயில்வேத்துறை நில அளவைத்துறை அனைத்தும் பிரிட்டிஷாரின் உருவாக்கமே. ஆர்.எஸ். எஸ். பார்ப்பனர்கள் போற்றிப்பாடும் பாரத்வர்ஷ் என்கிற பரதகண்டமானது இன்றைய அளவில் வட இந்தியாவில் இரண்டு மாவட்டங்களின் மொத்த அளவில் தான் இருந்திருக்க முடியும். அது போல் *56* தேசங்களைக் கொண்ட வட பகுதிகளில் எங்குமே பசு மாடு என்பது ஆட்சியின் அடையாளமாக வேதத்திலோ புராணத்திலோ பின்னர் வந்த காவியங்களிலோ சொல்லப்படவில்லை. ஆர்.எஸ்.எஸ். எவ்வளவோ முயன்றும் அதை அரசியல் சட்டம் மூலம் சாதிக்க முடியவில்லை. கடைசியாக *1952* ஆம் ஆண்டு தான் ஆர்.எஸ்.எஸ் காரர்கள் அதற்கான ஒரு அரசியல் கோரிக்கையை உருவாக்கினார்கள். உண்மை இவ்வாறு இருக்க *1925* இல் தோன்றிய ஆர். எஸ்.எஸ்.ஸோ யுகயுகமாய் பசுவே நம் கலாச்சாரச் சின்னம் என்று கதைவிடுகிறது. வரலாறு எழுதாத காலத்திற்கு இப்படி கதை சொல்லிக் கொள்ளலாம். ஆனால் கல்விமுறையும், வரலாற்றுப்பதிவும் எல்லோருக்கும் தெரிந்து விட்ட *20* ஆம் நூற்றாண்டிலும் இப்படிக்கதைவிட முடியும் என்பதை ஆர்.எஸ்.எஸ். இடம்தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

**– நேர்காணல் தொடரும்**


■ ஒரு மனிதன் மாபெரும் சாதனைகளை செய்யலாம், அவர்களிடம் நிறைய நம்பிக்கை இருந்தால் – ஷானன் கே புத்சேர்





# கடவுள் சக்தி அல்ல; மனித சக்தியே!

### எதிர்வினை:

“ஒவ்வொரு விசைக்கும் அதற்கு சமமான எதிர்விசை உண்டு” என்பதனை நம்பக்குடியவர்கள் நாம்; காரணம் அறிவியல் பூர்வமாக பல சோதனைகளைச் செய்து ஏற்றுக்கொள்ள கூடிய மன நிலையில் உள்ளவர்கள் நாம். இப்படி இருக்கும் போது இல்லாத ஒன்றை இருப்பதாக நம்பி அதனை கடவுள் என்றும், நம்மை விட புனிதமானவை என்றும், சக்தி படைத்தவை என்றும் பல நூறு ஆண்டுகளாக மக்களை நம்பவைத்து பிரார்த்தனை பரிகாரம் என்ற பெயரில் (நேர்த்திக்கடன்) அழகு குத்துதல், தீ மிதித்தல், ஆணி செருப்பில் நடத்தல், கத்தி மீது நிற்பது, காவடி எடுத்தல் என்றெல்லாம் தன்னை வருத்திக்கொண்டு செய்வது எவ்வளவு முட்டாள்தனமான செயல்; கடவுள் பக்தி உள்ளவர்கள்தான் இதை செய்ய முடியும் பக்தி இல்லாமல் செய்தால் கடவுள் தண்டித்து விடுவார் என்று சொல்வது ஏற்றுக்கொள்ள கூடிய செயலா..! இதோ பக்தி இல்லை..! விரதம் இல்லை..! உங்களின் அத்துணை நேர்த்திக்கடன்களும் கடவுள் சக்தி அல்ல அனைத்தும் மனித சக்தியே என்று செய்து காட்டுகிறோம்...

### அலகு குத்துதல் :

“கடவுள் இல்லை கடவுள் இல்லை
கடவுள் இல்லவே இல்லை
கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்
கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்
கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி“

என்ற முழக்கத்தோடு பக்தி இல்லாமல் விரதம் இல்லாமல் அலகு குத்தி கார் இழுக்கும் தோழர்களின் முதுகில் இரண்டு கம்பிகள் குத்தப்படுகின்றன, அந்த இரண்டு கம்பிகளிலும் தனிதனியே இரண்டு கயிறுகள் கட்டப்படுகின்றன, அந்த கயிறுகள் இரண்டும் இழுக்க இருக்கும் காரில் கட்டப்படுகின்றன அதாவது, இவர்கள் மனித சக்தியே என்று நிரூபிப்பதற்காக காரில் கட்டி இருக்கிறார்கள். அதுவே பக்தர்கள் பக்தியின் பெயரால் இழுக்கிறார்கள் என்றால் அவர்கள் 20 கிலோவில் ஒரு தேரை வடிவமைத்து அதனில் அந்தக் கயிறைக் கட்டி இருப்பார்கள்; மனித சக்திக்கும் கடவுள் சக்திக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாரீர். கடவுள் நம்பிக்கை உள்ள பக்தன் 20 கிலோவில் ஒரு தேரை இழுக்கிறான். கடவுள் நம்பிக்கை இல்லாத மனித சக்தியை நம்புகிறேன் என்று தன்னம்பிக்கையோடு செயல்படக்கூடிய நாத்திகன் 1.5 டன் எடை கொண்ட காரை இழுக்கிறான். இதனால் தான் மூடநம்பிக்கை ஒழிப்பு பிரச்சாரத்தின் போது அலகு குத்தி கார் இழுக்கும் தோழமைகள் “முதுகில் அலகு குத்தும் பக்தனே அடிவயிறில் ஓரலகு குத்திவா பார்க்கலாம்” என்ற வாசகத்தை வீதி வீதியாக விண்ணை முட்டும் அளவில் தன்னுடைய பலத்த குரலால் சொல்லி வருவான்

### அறிவியல் உண்மை:

மனிதனிடைய தோல்பகுதி குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் முதுகுப்புறம் உள்ள தோல் சற்று தடிமனான பகுதி; அந்த பகுதியில் சதையோடு அழகை குத்தும்போது அவை அந்த அழகை இறுக்கமாகப் பிடித்துக்கொள்கிறது, இதனால் தான் கொடுக்கும் விசையை தாங்கிகொள்கிறது. இதனாலேயே இவை சாத்தியமாகிறது. முதுகில் குத்தப்படும் அழகை அடிவயிற்றிலோ நெற்றியிலோ செய்ய முடியாது என்பதே அறிவியல்...

### தீ மீதித்தல்:

பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவருமே இந்த மூட நம்பிக்கையால் பாதிக்கப்பட்டவர்களே என்று சொல்லக்கூடிய நிலையில் தான் இருந்துகொண்டு

மு.சி.அறிவழகன்

வருகிறோம், காரணம் பெற்றோர்கள் நம்பிக்கை என்ற பெயரால் தான் மட்டும் அடிமைப்பட்டு இருப்பது போதாது என்று தன் பிள்ளைகளையும் அதே நிலைக்கு கொண்டு செல்கிறார்கள், அப்படி நம்பிக்கை என்ற பெயரால் நேர்த்திக்கடன் என்ற பெயரால் தீ மிதிப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்கள் பக்தர்கள்; இதை பக்தியோடு மட்டும்தான் செய்ய முடியுமா என்றால் இல்லை என்பதே பதில். காரணம் அறிவியல் பூர்வமாக பல பதில்கள் உள்ளது. கருப்புச்சட்டை அணிந்துகொண்டு கையில் மாமிசத்தை கையில் ஏந்திக்கொண்டு பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை கடவுள் இல்லை கடவுள் இல்லை இவை அனைத்தும் மனித சக்தியே என்று சுடும் நெருப்பின் மீது நடத்து காட்டினாள் கடவுள் சக்தி அல்ல இவை மனித சக்தி தானே என்று பொருள்...

## அறிவியல் உண்மை:

மனிதனுடைய பாதப்பகுதி என்பது சற்று தடிமனான பகுதி. குறிப்பிட்ட வெப்பத்தைத் தாங்கக்கூடிய பகுதி இதனால் தொடர்ந்து குறிப்பிட்ட நேரம் பயணிக்க முடியும் என்பதே அறிவியல் உண்மை; மாறாக குறிப்பிட்ட நேரம் நெருப்பின் மீது நிற்க முடியுமா என்றால் முடியாது என்பதே அறிவியல். சமமாக நெருப்பு பரப்பப்படாமல் இருந்தால் அதில் தொடர்ந்து நடக்க முடியாது. அதே போல முழுமையாக எரிக்கப்படாத நெருப்பிலும் நடக்க முடியாது என்பதே அறிவியல் கூறும் விளக்கம். இதனால் தான் தீ மிதித்தலின் போது பகுத்தறிவு தோழர்கள்“ நெருப்பின் மீது நடத்திடும் தோழா படுத்து எழுந்து வா பார்க்கலாம்” என்ற முழக்கத்தோடு மூடநம்பிக்கைகளை முறியடித்துக் காட்டுகிறார்கள்.

## ஆணி செருப்பில் நடத்தல்/கத்தி மீது நிற்பது:

இந்த ஆண்டு எனக்கு இந்த காரியம் (செயல்) நடந்தே ஆக வேண்டும் என்று பக்தியோடு ஆணி செருப்பை அணிந்துகொண்டு கோவிலைச் சுற்றி வருவார்கள். என்னவென்று கேட்டால் நேர்த்திக்கடன். அதனால் சுத்தபத்தமாக இருந்து வேண்டுதலை நிறைவேற்றுவதாகச் சொல்வார்கள். இதனை பக்தியோடு மட்டும் தான் செய்ய முடியுமா என்றால் இல்லை என்பதே உண்மை. காரணம் ஆணி செருப்பில் நடத்தல், கத்தியின் மீது ஏறி நிற்பது இவைகள் அனைத்தும் அறிவியல் பூர்வமாக





சாத்தியமே. இவற்றிற்கு பக்தியும் தேவை இல்லை விரதமும் தேவையில்லை நம்பிக்கை மட்டுமே போதும் அறிவியல் மனப்பான்மை மட்டுமே போதுமானது. பெரியார் பிஞ்சுகளே உங்களின் நம்பிக்கைகளை முறியடித்து காட்டும்போது கடவுள் சக்தி என்று ஒன்று இல்லை என்று நிரூபிக்கப்படுகிறது.





## அறிவியல் உண்மை:

சமமாக அடிக்கப்பட்ட ஆணியின் மீது நிற்க முடியுமே தவிர ஒற்றை ஆணியில் நிற்க முடியாது என்பது அறிவியல் உண்மை; அதாவது ஒற்றை ஆணியில் நிற்கும் போது நம்முடைய முழு எடையும் அதனின் மீது செலுத்தப்படும் இதனால் கீழே உள்ள அணி நம்முடைய பாதத்தில் ஏறுவதற்கு வாய்ப்பு உள்ளது. மாறாக சமமாக அடிக்கப்பட்ட ஆணியில் நிற்கும் போது நம் உடலின் மொத்த எடையும் சரி சமமாக பிரிக்கப்பட்டு அந்த ஆணியின் விசைக்கு எதிர் விசையை உடல் கொடுக்கிறது. இதனால் நாம் ஆணியின் மீது நிற்பது என்ன படுக்கலாம் உருளலாம், அதே போல தான் கண்ணாடி துண்டுகள் மீது நிற்பது கத்தியின்மீது நிற்பது எல்லாம் இவைகள்அனைத்துமே மனித சக்தியே தவிர கடவுள் சக்தி என்று ஒன்றும் கிடையாது.

அறிவியல் சொல்கிறது அனைத்தையும் சோதனை செய் என்று ஆனால் கடவுள் நம்பிக்கை சொல்கிறது நான் சொல்வதை அப்படியே கேள் என்று; இயற்கைக்கு மிஞ்சிய சக்தி ஒன்றும் இல்லை என்பதனை பக்தர்கள் மறுக்க வாய்ப்பு இல்லை என்று நம்புகிறேன், சுனாமி வெள்ளம் புயல் இவைகள் எல்லாம் இயற்கையின் சக்தி என்னும்போது கடவுள் சக்தி புனிதமானது என்றால் இதனை தடுக்காதது ஏன் என்ற கேள்வி எழுகிறது. இயற்கையின் சக்தியும் மனிதன் சக்தியுமே இயல்பானது மற்றவை அனைத்துமே செயற்கையானவையே!

ஒழியட்டும் மூடநம்பிக்கை! மலரட்டும் மனித நேயம்! ●



▪ குழந்தைக்கு அறிவு மட்டுமல்ல பகுத்தறிவையும் கற்றுக் கொடுங்கள் அதுவே மூடநம்பிக்கை அற்ற சமத்துவ சமுதாயத்தை வளர்த்தெடுக்கும்.



# தூக்குத் தண்டனை தீர்வாகுமா?



"தூக்குல போடணும் சார் அப்பத்தான் திருந்துவாங்க முஸ்லீம் நாடுகளின் மாதிரி கைகால்கள் துண்டிக்கணும் அப்பத்தான் பயம் ஏற்படும்"

இப்படியான குரல்கள் தற்போது பரவலாக கேட்கத் துவங்கியுள்ளது.

சிறுமிகளை பாலியல் வன்புணர்வு செய்யும் போதும் அரசுக்கு எதிரான செயல்பாடுகள் நடக்கும் போது தேச விரோதம் என்ற நோக்கிலும் தூக்குத் தண்டனை பற்றி விவாதிக்கப்படுகிறது. ஊடகங்களும் தங்களது ஊடக பரபரப்புக்கு இது போன்ற செய்திகளை முன்னெடுத்து வருகின்றனர். அதே போல தூக்குத் தண்டனைக்கு எதிரான குரல்களும் ஒலித்துக் கொண்டே உள்ளன.

தற்போது ஒரு அவசரச் சட்டம் மிக அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட சிறுமிகளை பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை வழங்க வகை செய்யும் சட்டமாக அது உள்ளது. நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறாத இக்காலகட்டத்தில், மிக கடுமையான முறையில் தண்டனை குற்றவாளிகளுக்கு வழங்க வேண்டியுள்ளது. எனவே மத்திய அமைச்சரவை கேட்டு கொண்டதற்கிணங்க குடியரசுத் தலைவரும் இச்சட்டத்திற்கு தமது ஒப்புதலை தெரிவித்துள்ளார்.

- இந்த அவசரச் சட்டத்தின்படி, சிறுமிகளை பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளுக்கு இனி அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கப்படும்.
- பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை சம்பவங்களை விசாரிப்பதற்காக, மாநில அரசுகள், உயர்நீதிமன்றங்கள் ஆகியவற்றின் ஆலோசனையுடன் புதிதாக விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.
- மேலும் மாநிலங்களில் சிறப்பு தடயவியல் பரிசோதனை மையங்கள் அமைக்கப்படும்.
- சிறார்களுக்கு எதிரான பாலியல் குற்றச் சம்பவங்களில் விரைவில் விசாரணை முடிக்கப்பட வேண்டும்.
- மேற்கண்ட விதிப்படி 2 மாதங்களில் வழக்குகள் முடிக்கப்பட வேண்டும்.
- மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகள் 6 மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.
- 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளை பாலியல் வன்புணர்வு செய்யும் நபர்களுக்கு முன்ஜாமீன் கிடையாது.

இவ்வாறாக கடுமையான விதிகள் இந்த அவசரச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இதை மேலோட்டமாக படிக்கும் நமக்கும் சரியான கருத்துருவாகவே தெரியும். ஆனால் இதனை வேறொரு பார்வையுடன் அணுக வேண்டும். ஒரு குற்றம் நடந்துவிட்ட நிலையில், அக்குற்றத்தின் மீது அரசு இயந்திரங்கள் (காவல்துறை, மாநில அரசு, வருவாய்த் துறை) நடவடிக்கை எடுக்காவிட்டாலோ, மக்கள் முறையீடு செய்வதற்கு கமிசன்கள் உள்ளன. அவை மக்களின் அடிப்படை உரிமைகளை, ஐக்கிய நாடுகள் சபையில் அனைத்து நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உரிமைகளை நடைமுறைப்படுத்துவது இந்த அமைப்புகளின் பணியாகும். இந்த அடிப்படையில் பெண்களிடையே ஏற்படும் பிரச்சனைகளை சரியான முறையில் அணுகி நீதி கிடைக்கச் செய்வது மகளிர்

முனைவர் பூ.மணிமாறன்

மனித உரிமை ஆணையம் ஆகும். ஆக அப்படியான ஆணையத்திற்கு தலைவராக திருமிகு.ஸ்வாதிமாலிவால் உள்ளார். இவர் பெண்குழந்தைகள் மீதான வன்முறைகளுக்கு எதிராக ஈடுபடும் நபர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி உண்ணாவிரதம் மேற்கொண்டார். குடியரசுத் தலைவர் மேற்கண்ட தூக்குத் தண்டனை அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன் கடந்த ஒன்பது நாட்களாக உண்ணாவிரதம் இருந்த ஸ்வாதிமாலிவால் தனது போராட்டத்தை கைவிட்டார்.

இவ்வாறாக பா.ஜ.க. நடுவணரசு மேற்கண்ட வழிமுறைகளை மேற்கொண்டு வருகிறது. இது ஒரு புறம் இருக்க, பா.ஜ.க. இது போன்ற பெண்கள் மீதான வன்முறைகளில் என்ன நிலைப்பாடு கொண்டுள்ளது எனக் காண்போம்.

மேலே குறிப்பிட்டுள்ள முன்னேற்பாடுகளுக்கு மாறாக பா.ஜ.கவினர் ஈடுபடுவதாக செய்திகள் நமக்கு தெரிவிக்கின்றன. காஷ்மீரில் உள்ள கதுவா என்னுமிடத்தில் எட்டு வயது சிறுமி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டுள்ளார். இச்செயலில் ஈடுபட்ட நபர்கள் பா.ஜ. கட்சியை சார்ந்தவர்கள் என நாம் அறிய முடிகிறது. அதே போன்று இச்சம்பவத்திற்கு தொடர்புடைய குற்றவாளிகளுக்கு ஆதரவாக, பா.ஜ.க.வின் ஒரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தது. அதில் பா.ஜ.க.வைச் சார்ந்த லால்சிங், சந்தர் பிரகள் ஆகிய இரண்டு அமைச்சர்கள் கலந்து கொண்டனர். ஆனால் இவர்கள் மீது பா.ஜ.க. எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பின்னர் காஷ்மீர் முதல்வர் மெஷ்பூபா முஃப் கொடுத்த நெருக்கடியின் காரணமாக இருவரும் பதவி விலகினர். அதுவும் பா.ஜ.க. காஷ்மீர் கூட்டணி அரசில் பங்கேற்றிருக்கும் நிலையில்தான் இந்த பதவி விலகலும் நடந்துள்ளது.




மேலும் மரண தண்டனை மூலமாக ஒரு குற்றத்தை ஒரு மனித விரோத செயல்பாட்டைத் தடுத்திட முடியுமா அல்லது குறைக்கத்தான் முடியுமா? நாம் தீர்க்கமாக ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அப்படியானால் முற்காலத்தில் இத்தகைய குற்றங்கள் குறைந்திருக்க வேண்டும், பின்னோக்கித் திரும்பிப் பார்த்தால் இல்லை என்ற பதிலே வருகிறது.



ஆக இவ்வாறாக இரட்டை நிலைப்பாட்டை பா.ஜ.க. அரசு எடுக்கிறது. ஒருபுறம் குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை அவசரமாக நிறைவேற்றுவதும், மறுபுறம் அவர்களால் கொணரும் சட்டத்திற்கு உரிய நபர்களுக்கு ஆதரவாக நிற்பதும், சரியா வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். அனுமதிக்கவே முடியாத ஒன்றாகும்.

மேலும் மரண தண்டனை மூலமாக ஒரு குற்றத்தை ஒரு மனித விரோத செயல்பாட்டைத் தடுத்திட முடியுமா அல்லது குறைக்கத்தான் முடியுமா? நாம் தீர்க்கமாக ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அப்படியானால் முற்காலத்தில் இத்தகைய குற்றங்கள் குறைந்திருக்க வேண்டும், பின்னோக்கித் திரும்பிப் பார்த்தால் இல்லை என்ற பதிலே வருகிறது.

கருத்தியல் ரீதியாக பெண் என்பவள் பலவீனமானவள், ஆணுக்கு கீழானவள் என்ற எண்ணம் அனைவர் மனத்திலும் வேரூன்றி போயுள்ளது.

அது குழந்தை முதல் பெரியவர் வரை இந்த எண்ணமயக்கத்திற்கு ஆட்பட்டுள்ளோம். இது வாழ்வியல் சிந்தனையாகவும் மாறிவிட்டது. இது ஒரு சாராரை மகிழ்விக்கவும் ஒரு சாராரை துன்பத்திற்கு ஆளாக்கவும் செய்கிறது. ஆண்கள் தனக்கு ஒரு அடிமை நிலையில் ஒரு பெண் கிடைத்ததற்கு மகிழ முடிகிறது. பெண் சிந்தனை வயதில் ஆக்கப்பூர்வமாக தான் இப்படி அடிமை நிலையில் உள்ளோமே என துன்புறும் நிலையில் உள்ளார்கள். ஆகவே இந்த கருத்தியல் மாந்தர் இனத்தின் இருபாலரை சிந்தனை மயமாகிவிட்டது. இத்தகைய ஆணாதிக்கக் கருத்தியல் பெண்கள் மீது வன்முறையாக வன்புணர்வாக பரிணமிக்கிறது. இத்தகைய வன்முறை இந்திய ஒன்றிய சமூக அமைப்பில் மிகுதியாகக் காணப்படுகிறது. இத்தகைய கருத்தியலை நாம் அடையாளம் கண்டு அழித்தொழிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

முதலில் நாம் நமது அறிவுக்கு விரோதமான கருத்தியல்களை அடையாளம் காண வேண்டும். பின்னர் நீக்கும் வழிமுறைகளை ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டும். இதனை தனிமனிதர்கள் பலர் சிந்தித்துள்ளனர். தந்தை பெரியார் தான் ஒரு ஆணாக இருந்தாலும் பெண்களின் துயரங்களை அவர்கள் துயரும் வழிவகைகளை எளிமையான முறையில் நம் கண் முன் நிறுத்துகிறார். மேலும் அதனை நீக்கும் வழிமுறைகளையும் சொல்கிறார். மேலும் நாமும் இத்தகைய ஆதிக்கக் கருத்தியலை உணர்ந்து அகற்ற மனமுவந்து முன்வர வேண்டும்.

ஆகவே நிர்பயா முதல் கதுவா சம்பவம் வரை நாம் பார்த்தோமானால் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவற்றை நாம் கடுமையானச் சட்டங்கள் மூலம் மட்டும் தடுத்துவிட முடியாது. மக்களிடையே மனமாற்றத்தின் மூலமாக நீடித்த தீர்வை எட்ட முடியும். மரண தண்டனைகள் மட்டுமே தீர்வைத் தராது. ஆகவே நிரந்தர தீர்வு நோக்கி நாம் பயணிப்போம். ஒரு போதும் மரணதண்டனை பயன்தராது. ●

அன்று இரவு முழுவதும் உறக்கம் பிடிக்காமல் புரண்டு புரண்டு உச் கொட்டியபடி இருந்தான். அமாவாசை காற்று சரியாக கிடைக்கவில்லை. புழுக்கம் காதோரம் அடிக்கடி எத்தனை கடவுள் வந்தாலும் என்னை அழிக்க முடியாது என்பதுபோல் கொசுக்கள் முகத்திலும் உடலிலும் கடித்தபடியே ‘ரீய்ய்ங்க்’ என்றபடி வட்டமடித்துக் கொண்டிருந்தது.

அவர்களது செல்லில் கழிப்பறை கொஞ்சம் நாற்றத்தை அதிகமாகவே வீசியபடி நாசியைத் துளைத்துக்கொண்டிருந்தது.

அவனால் தூங்கமுடியவில்லை. எழுந்து தலையணைக்கு கீழ் ஒளித்து வைத்திருந்த துண்டு பீடியை தேடி எடுத்தான். ரொம்பவே சிறியதாகி போயிருந்தது. அந்த அறை மூலையில் எரிந்துகொண்டிருந்த கொசுவர்த்திச் சுருளை எடுத்து பீடியைப் பற்றவைத்தான் அமாவாசை. வெறும் ஒரு அங்குலமே நீளம் இருந்த அந்த பீடியை லாவகமாக கட்டை விரல் ஆள் காட்டி விரல் நகத்தில் பிடித்தபடி நாலு இழுப்பு இழுத்து அணைத்து வீசினான்.

“மாப்ள டே ஏன் இன்னமும் தூங்கலையா?” என்றபடி எழுந்தான் சின்னச்சாமி.

“இல்ல மாப்ள தூக்கம் வரல. ஒரே புழுக்கமா இருக்குது மனசெல்லாம் ரொம்ப ரணமா இருக்குது தூங்க முடியல”

“ஏன் மாப்ள மத்தியானம் நடந்த பிரச்சனை பத்தி நெனைச்சிகிட்டு இருக்கறியா. விடு வெளியில் போனபிறகு அவன் ஊர்லயே போய் அவனை நாம செய்யலாம் தூங்கு” என்றான் சின்னச்சாமி.

“வேணாம் மாப்ள அவனை அடிச்சி ஒதைச்சி என்ன ஆகிடும்னு நெனைக்கற. அவனைப்போல ஆளுங்களுக்கு சாதி வெறி இருக்கறது இயல்புதான் இந்த சமூகம் அதைத்தானே கத்துகொடுத்திருக்கு...

அவன் அவனோட அறியாமையில்தான் அப்படி பண்றான் நானும் ஆத்திரத்தில் கையை நீட்டிபுட்டேன் ரொம்ப சங்கடமா இருக்குது மாப்ள. பாவம் நல்லா அறைஞ்சுபுட்டேன் கடைவாயில் ரத்தமே வந்துடுச்சு



# எச்சில் தொட்டி

## சிவா சடையன்



# 14

“அவனெல்லாம் என்ன தப்பு பண்ணுனான். பசி கொடுமை தாங்காம ரெண்டு புரோட்டாவை எடுத்துட்டான். அதுக்கு ஒரு ஊரே சேர்ந்து அடிச்சு அவனை சாகற அளவு சித்தரவதை பண்ணி இருக்கானுக.

அடிச்சது மட்டுமில்லாம திருட்டு பட்டமும் கேசும் இவன் மேல. ஆதரவுக்கு யாருமே இல்லாத காரணத்துலதான் திருடி தின்ன வேண்டிய நெலைமை இவனுக்கு. இனிமே இவனுக்கு யாரு கேசு நடத்துவா. இவனுக்கு பெயில் யார் போடுவா.”

அவனுக்கு ...”

“ஏய் என்ன மாப்ள இப்படி பேசற... அவன் நம்மள நம்ம சாதிய நம்ம பொம்பளைங்கள பத்தி தப்பா பேசுனான். அதனால்தானே அடிச்ச. நீயே அவனைப்போய் பாவம்னு பொலம்பிகிட்டு இருக்கற விடு மாப்ள.”

“இல்லமாப்ள கொஞ்சம் யோசனை பண்ணி பாரு. இந்த ஜெயிலுக்குள்ள இருக்கற யாராச்சும் தோப்பு தொறவு காடு காரு பங்களான்னு வைச்சிருக்கறவன் இருக்கானா யாருமே இல்லை...

அப்படியே இருந்தாலும் நிலம் சம்பந்தமான கேசு வரதட்சணை கேசு செக் மோசடி கேசு இதுல தான் இருக்கானுங்க...

இந்த சமூகத்துக்காக அடக்குமுறைக்கு எதிராக எவனாவது போராடி வந்திருக்கானா இல்லை. அப்படியே இருந்தாலும் தொழில் கவுரவம் தொடர்பான எதோ ஒரு பிரச்சனையில் எதிரிகள் சதியில் உள்ள இருக்கற பணக்காரனுக தான் அதிகம்.

நம்ம கண்ணுக்கு தெரிய எத்தனை கொடுமைகள் செய்யறானுக இந்த ஆண்டைங்க.

முறையாக பாத்தமுன்னா இந்த சமூகத்துல பெரிய மனுசன் போர்வைல இருக்கற அவனுக தான் இங்க உள்ள இருக்கனும். அத்தனை அயோக்கியத்தனத்துக்கும் சொந்தக்காரனுக அவனுகதான்.

உழைப்பை சுரண்டுவது குற்றம். எத்தனையோ பேத்துக்கு அடுத்தவேளை சோத்துக்கு வழியில்லை. இவனுக தானியங்களை பதுக்கி வைச்சி திங்கறது குற்றம்.

பொதுவான இந்த பூமியை தன்னோட ஆளுமையை செஞ்சு நூத்துக்கணக்கான ஏக்கர் நிலங்களை அபகரிச்சு வைச்சிருக்கறது குற்றம்.

ஒரு ஏழையால மருத்துவம் பாக்க வழியில்லாம செத்துப்போகும்போது இவனுக கட்டுகட்டா பணத்தையும் நகையையும் பதுக்கி வைச்சிருக்கறது குற்றம்.

எத்தனையோ ஏழை பெண்களுடைய உடலை அவங்க அனுமதி இல்லாமலே கட்டாயப்படுத்தி வன்புணர்வு செஞ்சதெல்லாம் குற்றம்.

இப்படி அடுக்கிகிட்டே போலாம் மாப்ள. முறையாக பாத்தோமுன்னா அவனுகதான் இந்த ஜெயில்ல இருக்கணும்.

இங்க இருக்கறவன்லாம் யாருனு பாரு...

தன்னோட கிராமத்துல அடிப்படை வசதிகூட இல்லாத அடுத்தவேளை சோத்துக்கு நாயா அலையுறவன் வெயில்ல வேர்வை சிந்தி உழைக்கறவன் தான் அதிகம். அதுக்காக எல்லாருமே யோக்கியன் அப்படிசொல்லிட முடியாது.

இந்த சட்டமும் போலீசும் சாமானியன் மேலதான் கைவைக்கும் பணக்காரனை கண்டால் நாய் குட்டியாய் வாலை ஆட்டும்.

இந்தா நேத்து நம்ம செல்லுக்கு வந்தானே இந்த பையன் முருகன்.

அவனெல்லாம் என்ன தப்பு பண்ணுனான். பசி கொடுமை தாங்காம ரெண்டு புரோட்டாவை எடுத்துட்டான். அதுக்கு ஒரு ஊரே சேர்ந்து அடிச்சு அவனை சாகற அளவு சித்தரவதை பண்ணி இருக்கானுக.

அடிச்சது மட்டுமில்லாம திருட்டு பட்டமும் கேசும் இவன் மேல. ஆதரவுக்கு யாருமே இல்லாத காரணத்துலதான் திருடி தின்ன வேண்டிய நெலைமை இவனுக்கு. இனிமே இவனுக்கு யாரு கேசு நடத்துவா. இவனுக்கு பெயில் யார் போடுவா.

நம்மளையாச்சும் நம்ம சொந்தக்காரங்க வந்து பாத்துட்டு போறாங்க. இவனுக்குனு யார் வருவா பாவம் இந்த சட்டமும் போலிசும் சேரிக்குள்ளயும் வலவுக்குள்ளயும் ஊருக்குள்ளயும் துணிச்சலா நுழையுற மாதிரி அக்ரஹாரத்துலயும் அடுக்குமாடி குடியிருப்பிலும் நுழையுமா?

முடியவே முடியாது அக்ரஹாரமும் அடுக்கு மாடி வெள்ளை சட்டைகளும் தான் இவனுங்களுக்கு படி அளக்கிற கூட்டமாய் இருக்குது.

“இங்க உரிமைக்காக போராடுற அத்தனை பேரும் தேச துரோகி தேச விரோதி.”

அமாவாசை பேசுவதை ஆச்சர்யத்துடன் பார்த்தான் சின்னச்சாமி இந்த மூணு மாசத்துல இவ்வளவு மாறிட்டானே மாப்ள என்று தனக்குள் நினைத்துகொண்டான்.

“மாத்தணும் மாப்ள எல்லாத்தையும் மாத்தணும் அதுக்கு நாம முதல் பலி ஆனாலும் தப்பில்ல. எல்லாத்தையும் முடியுமானு தெரியல முடிஞ்சவரைக்கும் மாத்துவோம் மாப்ள.”

**- தொடரும்**



▪ காலத்தை பணத்தைவிட கவனமாக நிர்வகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். - கி.வீரமணி

கவிஞர். நா.காமராசன் மண்டகொளத்தூர்

# அந்த தாமரைக்குளமும் நாங்களும்!



பாசிப்படர்ந்த அந்த
தாமரைக்குளக்கரைகள்
எப்போதும் அடர்ந்தே இருக்கும் முள்வேலி
மரங்கள் சூழ்ந்து!

விடுமுறை நாட்களில் மட்டுமல்ல
வீட்டுப்பாடம் எழுதச்சொன்ன
நாட்களிலும் கூட எங்களுக்கு
அடைக்கலம் தந்தது அந்த
குளமும் குளக்கரையும்தான்!

பொம்மைகள் வாங்கமுடியாத
குடிசைகளில் பிறந்ததாலோ
என்னவோ -அந்த
கரைகளின் களிமண்ணில்
பொம்மைகள் செய்து
விளையாடியிருக்கிறோம்!

அதிகபட்சமாய் எங்கள் சிந்தனைகள்
இதைத்தாண்டி சிறகடித்ததில்லை,
எங்கள் பொம்மைகள்
இப்படித்தானிருக்கும்!

கூர்தீட்டிய கொம்புகள்கொண்ட
ஏர்மாடுகள்;
சோறாக்கவும் மீன்குழம்பு
வைக்கவும் சின்னச்சின்ன
மண்பானைகள்;
தாமரை இலைகளைப்போல
காதுமடல் விரிந்த
கருப்பு யானைகள்!

அப்போது மாவீரன் படத்தில்
ரஜினி வந்த வெள்ளைக்குதிரை;
திருவிழா நாட்களிலும்
கல்யாணப்பந்தலிலும் ஒலிக்கும்
ரேடியோ பெட்டிகள்.
இதுதான் நாங்கள் செய்யும்
களிமண் பொம்மைகள்!

நாங்கள் இவைகளோடு
பேசியிருக்கிறோம்;
யானைகளோடு
நடந்திருக்கிறோம்;
குதிரை மீதேறி
பறந்திருக்கிறோம்;
"உலகம் பிறந்தது எனக்காக
ஓடும் நதிகளும் எனக்காக"
இப்படி அந்த ரேடியோ பெட்டிகள்
வழியே அந்த குளக்கரையின்
எல்லா பக்கங்களிலும்
எங்கள் குரல்களை எதிரொலிக்கச்
செய்திருக்கிறோம்!

அந்தக்குளமும் கரைகளும்
எங்களுக்கு மீன்பிடிக்க
கற்றுத்தந்தது;
நீச்சல் பழக கற்றுத் தந்தது;
நண்டு பிடிக்க கற்றுத்தந்தது;
ஏன் சிலநேரம் முயல்களையும்
கொக்குகளையும் கூட வேட்டையாடக்கூட
கற்றுத்தந்திருக்கிறது!

எங்களுக்கு பசியெடுத்தால்
கூழ் தேவையில்லை
சில கெண்டை மீன்களும்
சில கெளுத்தி மீன்களும் போதும்
நெருப்பில் சுட்டே
பசியாறுவோம்!

வெயில் அடித்தால்
நீரில் இருப்போம்
குளிரெடுத்தால்
கரையில் இருப்போம்;
சிலநேரம் குளிரையும்
வெயிலையும் மறந்தே
இருப்போம்!

கண்கள் சிவக்க
நீச்சலடிப்போம்;
சேற்றில் புதைந்து
மீன்பிடிப்போம்;
மாலை வந்தால்
தாமரை அரும்புகள்
பறித்து மேலே வருவோம்!

எப்போதோ வரும்
மழைநாட்களுக்காக
காத்திருப்போம் எங்கள்
தெருமண்ணில்;
புரண்டுவரும் மழைநீரை
கைகள் கொண்டு
அழைத்துச்செல்வோம்-அந்த
தாமரைக்குள கால்வாய்நோக்கி!

அந்த மழைநாளின் ஒவ்வொரு
விடியலிலும் ஓட்டமாய்
ஓடுவோம் -அந்த குளத்தை நோக்கி
நேத்து இடுப்புவரை தொட்டநீர்
இன்று கழுத்தளவு வந்திருக்குமா
என்ற ஆவல் துடிதுடிக்கும்!

அந்த தாமரை இலைகளும் கூட
ஒவ்வொரு நாளும்
மேலெழுந்துகொண்டே
இருக்கும்!

அப்போதெல்லாம் அந்த
தாமரைக்குளம்தான்-எங்களுக்கு
கடல்
அருவி
அதன் கரைகள்தான்
எங்கள் கால்கள்தொட்ட
சிகரங்கள்!

இப்போது நாங்கள் வளர்ந்தபோது
கொஞ்ச கொஞ்சமாய் செத்திருந்தது
அந்த மரங்களும்
தாமரைக்கொடிகளும்!


தூரத்திலிருந்து பார்த்தாலே
தெரிகிறது மொட்டையாய்
அந்த களிமண்கரைகள்;
ஆங்காங்கே வெடித்துசிதறி
வானம் நோக்கி காத்திருக்கிறது
எப்போதோ வரும் மழைக்காய்
அந்தக்குளம்!


இப்போது யார் அழைத்து
வருவார்
அந்த தாமரைக்குள
கால்வாயைத்தேடி
தெருவில் அலைமோதும்
அந்த மழைநீரை!


இப்போது எங்கள் பிள்ளைகள்
ஊரில் இல்லை
வனாந்தரம் கடந்து
போயிருக்கிறார்கள்
வயிற்று பிழைப்புத்தேடி!

அதோ அந்த தெருவெள்ளத்தைப்
போலவே திக்குத்தெரியாமல்
அலைகிறோம்;
கட்டாயம் ஓர்நாள்
கரையேறுவோம் என்ற
நம்பிக்கையில்!

மீண்டும் அந்த பிஞ்சுக்கைகள்
வழிகோலும் உன் குளக்கரையை
நோக்கி!
அதுவரை எங்களை மன்னித்திரு
கூடவே எங்களுக்காய் காத்திரு
எனதருமை தாமரைக்குளமே!





# திருமண வாழ்த்து!



ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு
அவர்களது, "வாழ்க்கையை"
கூடுப்பொறுப்பில் "வாழ" இருக்கும்
மணமக்களை "வாழ்த்துகிறோம்"

**P.சுபாஷினி** B.E.,
**S.M.காளீஸ்வரன்** DTT.BBM
(Coimbatore Agricultural
Co-Operative Marketing Society)

நாள்: 17-06-2018

இடம்:
**ஸ்ரீகுருவாயூரப்பன் திருமண மஹால்**
சமத்தூர், பொள்ளாச்சி.

**மணமக்களை வாழ்த்தும்**
**நண்பர்கள் மற்றும் உறவினர்கள்**

revAmp

# Revamp Technologies

(Making things better)

## Our Business

- Software Development
- Software Consultancy
- Web Application & Design
- Mobile Application
- ERP Solution

## Revamp Technologies

14A ,2nd Floor, K R Complex
Opp. Meera Mahal, Railway Station Road
Hosur - 635 109. Tamil Nadu.

Mobile : +91 99 44 0101 55
+91 98 940 740 30

Email : msn@revamptechnologies.com
Web : www.revamptechnologies.com

FROM
ARIVAZHAGAN CM
Editor & Publisher
kaithadi Monthly
2/343, Kamalapuram Village
Mallikuttai Post,
Karimangalam
Dharmapuri - 635 205
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com

Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.